Registered as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 25 [09-07-98] வெள்ளிக்கிழமை ஓசை 141

வைத்திய ஆய்வு அறிக்கை

## இந்திய விஷகடி மருந்து பிரச்சினை ஏற்படுத்தும்!

பாம்புக்கடிக்காக வழங்கப்படும் இந்திய விஷமுறிவு மருந்துகள் இங்குள்ள நோயாளிகளில் பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக ஆய்வுஒன்று கூறுகிறது. இலங்கையில் தினசரி இருவர் பாம்புக்கடியினால் உயிரிழப்பதாக வைத்திய அறிக்கைகள் கூறுகின்றன. ஆண்டுதோறும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் இவ்வாறு மரணிக்கின்றனர். உடனடியாக பொருத்தமான சிகிச்சை அளிக்க தவறுவதே இம்மரணங்களுக்கு காரணம் என

(09ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு; விரைவில் நடத்தும் திட்டம் தோல்வி!

## ராணுவம்பதுங்கித் தாக்குதல் 3 போராளிகள் வீரச்சாவு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் இருவேறு தினங்களில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட தாக்குதலினால் மூன்றுபோராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

கடந்த நாலாம் திகதி திருமலை மாவட்டத்தில் உள்ள சிற்ராறு என்னுமிடத்தில் கொம்மாந்துறையில் சென்று கொண்டிருந்த விடுதலைப் புலிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் கப்டன் சான்டோ/பெரிய தம்பி (நேசராசா குமாரவேல் சாம்பல்தீவு, திருக்கோணமலை) வீரச்சாவடைந்தார்.

கடந்த 6ஆம் திகதி இரவு 9.50 மணியளவில் நிலாவெளியில் உள்ள 7ஆம் கட்டை பகு

(10ஆம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழு - இராணுவ அதிகாரிகள் சந்திப்பின் பின்னர் முடிவு

[கொழும்பு]

வடக்குடன் கிழக்கு மாகாணத்தை இணைப்பது தொடர்பாக கிழக்கு மாகாணத்தில் மக்கள் கருத்து வாக்கெடுப்பு நடத்தும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. அரசியல் வாதிகளுக்கும் பாதுகாப்புப்படை உயர் அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பிற்கு பின்னர் சர்ச்சைக்குரிய மேற்படி திட்டத்தை கைவிடுவது என முடிவு செய்யப் பட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

வடக்கையும் கிழக்கையும் ஒன்றாக இணைப்பதா இல்லையா எனும் முடிவை எடுக்க கிழக்கில் மக்கள் கருத்து வாக்கெடுப்பை நடத்த மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழுவும் சிபார்சு செய்திருந்தது இனப்பிரச்சினை தீர்வு தொடர்பானவிவகாரத்தில் இணைப்பு குறித்த கருத்து வ கடுெடுப்பு என்ற விடயம் சர்ச்சைக்குரியதாக இருந்தது என இது தொடர்பாக கருத்து வெளியிட்ட பி பி. ஸி செய்தியாளர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அச்செய்தியாளர் மேலும் கருத்து தெரிவிக்கும் போது,

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண இந்த பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கபபட்டிருந்தது. இது குறித்து நடைபெற்றபேச்சு வார்த்தைகளின் போது தனிநாடு கோரிபோராடும் தமிழ் குழுக்கள் எவையும் கலந்து கொள்ளவில்லை, இனப்பிரச்சினைக்கு தீர்வு காண பெரும்தடையாக இருப்பவற்றில் இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் வருங்கால நிலை தொடர்பான பிரச்சினையும் ஒன்று. தமிழ் அரசியல்வாதிகள் வடக்கும் கிழக்கும் தமிழரின் தாயகம் என்றே

(10ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ ஆக்கிரமிப்பு; இடமின்றிமக்கள் அலைச்சல்

மட்டக்களப்பு கொம்மாந்துறைப் பகுதி முழுவதும் சிறிலங்கா இராணுவத்தின் பிடிக்குள் இருப்பதால் அப்பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் இருப்பிடமின்றி அலைகின்றனர். இந்நிலை கடந்த மூன்று வருடங்களாக தொடர்ந்துகொண்டிருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சு முதலானோருக்கும் அம்மக்கள் மகஜர் அனுப்பியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கொம்மாந்துறை முழுவதும் இராணுவ முகாமாக இயங்கிவருகின்றது. இதேவேளை, முறக்கொட்டாஞ்சேனையிலுள்ள பெரிய பாடசாலைஒன்றும் இராணுவ முகாமாகமாற்றப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடமாட்டேன்

### டி. பி. விஜேதுங்கா முடிவு

(கொழும்பு)

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என தற்போதைய ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தனது மிக நெருக்கமான வட்டாரங்களுக்கு தெரிவித்துள்ளதாக ''ராவய'' பத்திரிகை ஆசிரியர் விக்டர் ஐவன் தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸிக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் இவ்வாறு தெரிவித்தார், அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் தற்போதைய ஜனாதிபதிக்கு தேவைப்படுவது பழைய முறையிலான பாராளுமன்ற முறைக்கு ஆட்சிமுறையை மாற்றுவதேயாகும் இதற்கு இசைவான நடவடிக்கையில் ஜனாதிபதி மும்முரமாக செயல்பட்டு வருவதாகவும் ஐவன் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து ஆளும் ஐக்கிய தேசிய கட்சிககு இடையே பாரிய கருத்து வேறுபாடுகள் நிலவும் என்றும் இதனால் அடுத்த கட்சித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதஉரிமை மீறல்; மன்னிப்புச்சபை பிரஸ்தாபம்

(கொழும்பு)

யுத்த அனர்த்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சட்டரீதியற்ற மரணங்களும், காணாமல் போனவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகவும் இவை அரசாங்க படையினர் மட்டுமன்றி அரசாங்க ஆதரவு பெற்ற தமிழ்க் குழுக்களினாலும் மேற்கொள்ளப்படுவதாக சர்வதேச மன்னிப்பு சபையின் ஆண்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் காணாமல் போனவர் தொடர்பாக தேடும்பணிக்கு அரசாங்கம் ஒருகுழுவை நியமித்து இரண்டு வருடங்கள் ஆனபோதும் ஆறு சம்பவங்களை மட்டுமே இதுவரை விசா த்து வந்துள்ளது. இதில் சிலசம்பவங்களில் குற்றவாளியாக காணப்பட்ட பாதுகாப்பு படையினருக்கு எதிராக வழக்கு தொடர வேண்டிய நிலை இருந்தபோதும் சில

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என யாழ் மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## சிறப்பு புலனாய்வு குழு துப்புகளை அழித்து விட்டது

### வழக்கறிஞர் தெரிவிப்பு

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலைக் குற்றத்தை விடுதலைப்புலிகள்மீது சுமத்துவதற்காக மேற்படி கொலை விசாரணையை மேற்கொண்டுவரும் சிறப்புப் புலனாய்வுக்குழு பல முக்கியமான துப்புக்களைக் கருத்தில் கொள்ளவில்லையென்றும், முக்கியமான பல உண்மைகளை அழித்துவிட்டதாகவும் கொலைதொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக வாதாடும் வழக்கறிஞர் திரு. சந்திரசேகர் கூறியுள்ளார்.

மத்திய அமைச்சரவையின் உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் அவர்கள் இந்திய நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பாக அவரிடம் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு கேள்விகள் கேட்டிருக்க வேண்டும் என்றும் சந்திரசேகர் கூறியுள்ளார்.

அத்துடன் பி எல். ஓ. தலைவர் ராஜீவ் காந்தியை கொல்ல சதி நடபபதாக முன்னாள்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் யாப்பை திருத்த தெரிவுக்குழு நியமனம்

(கொழும்பு)

அரசியல் யாப்பில் திருத்தங்கள் செய்வது பற்றி பரிசீலிக்க சிறிலங்கா அரசாங்கம் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்கவுள்ளது. அரசியல் யாப்பு இராஜாங்க விவகார அமைச்சர் சொக்ஸி இது தொடர்பாக தெரிவித்திருந்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது.

அரசியல் யாப்பிற்கு திருத்தங்கள் செய்வது பொருத்தமானதா? என்று இந்தத் தெரிவுக்குழு பரிசீலனை செய்யும். தற்போதைய அரசியல் யாப்பு 15 வருடங்களாக அமுலில் இருந்துவருகிறது.

அரசியல் யாப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனஎதிர்க்கட்சிகள்வலியுறுத்தி வருவது தெரிந்ததே. அரசியல் யாப்பு மாற்றத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பாராளுமன்றத்தில் தேவை. பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்றும் நடத்தப்பட வேண்டும் என யாப்பு விதிகள் குறிப்பிடுகின்றன.

தற்போதைய ஜனாதிபதி ஆட்சிமுறையில் அதிகாரங்கள் அவரிடமே குவிந்துள்ளது என்றும், எனவே மீண்டும் வெஸ்மினிஸ்டர் பாராளுமன்ற முறையை கொண்டுவரவேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் இதுவரை வலியுறுத்திவந்தன.

ஜனாதிபதி பிரேமதாசா ஆட்சிக்காலத்தில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தபோதிலும் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜய

(10ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி கரை நோக்கி பீரங்கித் தாக்குதல்

[தென்மராட்சி]

கிளாலி கரையை நோக்கியும், அல்லிப்பளை நோக்கியும் நேற்றிரவு படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தினர். நேற்றிரவு 7.15 மணியளவில் கடற்படையினர் கரையை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பயணிகள் தமது பயணததை தொடர்ந்ததாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. [86

## வரி விளம்பரம்

**கல்தேக்கு [கத்தாப்பு] விதை**

நாற்றுமேடைப் பயன்பாட்டுக்குக் கல்தேக்கு (கத்தாப்பு) விதை தேவை. தொடர்பு- (சி-6966) மில்க்வைற்

**வைத்திய சேவை**

இரெட்ணம் வைத்திய சாலை 129, ஸ்ரேஷன் றோட் யாழ்ப்பாணத்தில் சகல நோய்கட்கும் நவீன மருத்துவமுறைப்படி சிகிச்சையை வழங்குகிறது இரவு பகல் சேவையுடன் அவசர நோயாளர் தங்கும் வசதியும் உண்டு நிர்வாகி ''இலங்கைப் பல்கலைக்கழக மருத்துவக் கலாநிதி'' க. இராசரெட்ணம். (5285)

**திருத்திக் கொடுக்கப்படும்**

தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரம், பிரதிபண்ணும் இயந்திரம் சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் குறைந்த செலவில் உத்தரவாதத்துடன் திருத்திக்கொடுக்கப்படும். றொசிவூட் GR. மருசலிங்கம் 8/1, E அம்மன் வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். (5211)

**விற்பனைக்கு**

முட்டையிடும் வெள்ளை நிற பாம் கோழிகளும், நல்ல இன பால் கறக்கும் மாடுகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பண்ணை, இருபாலைகிழக்கு, அரசடி றோட் இருபாலை. (5293)

**விற்பனைக்கு**

மூன்று பரப்பு புதிய மேல் மாடி வீடு. ஆஸ்பத்திரி, அலுவலகங்களுக்கும் இரு குடும்பங்கள் இணைந்து வாழ்வதற்கு ஏற்றதுமான பத்து அறைகள், அகன்ற முற்றங்கள், தனிக் கிணறு, சுற்று மதிலுடன் விற்பனைக்குண்டு பொ. காங்கேயன், சட்டத்தரணி மருத்துவக் கல்லூரி எதிர், திருநெல்வேலி. (5299)

**துவரம் பருப்பு**

ஆடி விதை தேடி விதை சிறந்த வர்க்கத் துவரம் விதை அறிமுகப் பக்கற் ஒன்று பெற, பத்து மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் சேர்ப்பிக்கவும். - மில்க்வைற் [சி-6980]

**திருமண சேவை**

பொருத்தமான மணமகள்/ மணமகன் எம்மிடம் உண்டு. தொடர்பு: மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [5314]

**தவறிவிட்டது**

சிங்கராஜா சுபராஜா (670970671 V) என்னும் இலக்கம் உடைய அடையாள அட்டை ஐந்து சந்திக்கும் ஓட்டுமடம் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும். (5318)

**ஓவிய, சிற்ப கண்காட்சி**

குரும்பசிட்டி சன்மார்க்க சபை சன்மார்க்க நுண்கலை மன்ற முதலாம்ஆண்டு நிறைவு விழாவையொட்டி இன்றும், நாளையும் ஓவிய சிற்பக்கண்காட்சியொன்றை நடாத்துகிறது இன்று காலை 9.00மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும். இக் கண்காட்சி இரு தினங்களும் 3.00 மணி வரை திறந்திருக்கும். ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பரிசளிப்பு விழா இடம்பெறும்.


## உணவுமுத்திரையின்மையால் பொருள் விநியோகம் தாமதம்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்கென உணவுப் பொருள்கள் யாழ். செயலகத்தில் கையிருப்பில் உள்ள போதிலும் முத்திரைகள் கொழும்பிலிருந்து வராத காரணத்தினால் ஜூன் மாத விநியோகம் தாமதத்திற்குள்ளாகியுள்ளது. இதனால் இடம்பெயர்ந்த மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது

சமீபகால இராணுவ நடவடிக்கைகளினால் வலிமேற்கு தீவுப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து வந்து பாதுகாப்பான இடங்களில் தங்கியுள்ளனர். இவர்களுக்குரிய இலவச உணவுப் பொருள்களே விநியோகிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (தி)

மூளைநரம்பு பாதிக்கப்பட்டவர்

## அவசர சிகிச்சைக்காக விமான மூலம் சென்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையில் இருந்த நோயாளி ஒருவர் அவசர சிகிச்சைக்காக நேற்று பலாலி விமான நிலையத்தில் இருந்து விமான மூலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

தம்பியையா மஞ்சுரன் (16 வயது) என்ற நோயாளியே நேற்று கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவருக்கு மூளைநரம்பு சம்பந்தமான நோய் ஏற்பட்டதை அடுத்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இருந்தும் இவருக்கு மேலும் அதிவிசேட சிகிச்சைதேவைப்பட்டமையை அடுத்து கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார் (யோ) (பா)

## கட்சிசெயலாளருக்கு எதிராக சு. க. உறுப்பினர் பிரேரணை

(கொழும்பு)

கட்சி செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தக் கூடாதுஎன கோரும் பாராளுமன்ற தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி உறுப்பினர் நெவில் பர்ணன்டோ நடவடிக்கை எடுத்துள்ளார்.

தனிநபர் பிரேரணையாக இவரால் கொண்டுவரப்பட்ட இத்தனிநபர் பிரேரணை பாராளுமன்றத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளது. இத்தனிநபர் பிரேரணை சுதந்திரக் கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதனை சிறிமாவோ பண்டாரநாயக்கா குழுவினர் எதிர்ப்பதாகவும் அனுரா குழுவினர் ஆதரிப்பதாகவும தெரிவிக்கப்படுகிறது.

## பயிலுநர் ஆசிரிய நியமனம் பணிப்பாளர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக பயிலுநர் ஆசிரியராக 97பேரும், பயிலுநர் பட்டதாரி ஆசிரியராக சுமார் 97 பேரையும் நியமிப்பது தொடர்பாக கல்விச்சேவைகள் அமைச்சரின் அங்கீகாரம் பெறும் பொருட்டு யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக நேற்று கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

1989ஆம் ஆண்டு பயிலுநர் ஆசிரியராக விண்ணப்பித்து புள்ளியடிப்படையில் ஆசிரியர் நியமனம் கிடைக்காது போன சுமார் 102விண்ணப்பதாரிகள் தொடர்பாக யாழ். கல்வித் திணைக்களம் சிபார்சு செய்த போதும் 97 விண்ணப்பதாரிகளே மீள விண்ணப்பங்களையும் தமது உறவினரை இழந்ததான இறப்பு சான்றிதழ் படிவங்களை இணைத்து அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## குளம் புனரமைப்பு

கரும்புலிகள் நினைவாக கடந்த 2ஆம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக பணியாளர்களினால் நந்தாவில் குளம் சிரமதான அடிப்படையில் புனரமைக்கப்பட்டது.

இந்தக் குளத்தின் உடைந்திருந்த அணைக்கட்டுப் பகுதியும், பற்றைகள் படர்ந்து தூர்ந்து போயிருந்த வாய்க்கால் பகுதியும் புனரமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### கோழிக்குஞ்சு விநியோகம்

முல்லைத்தீவு மாவட்டத்திலே முட்டை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யும் அதே வேளை வேலை வாய்ப்பினை வழங்கும் நோக்கத்துடனும் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உள்ள புளியங்குளத்தைச் சேர்ந்த 20 படித்த பெண்களுக்கும், நெடுங்கேணிப் பிரதேச சேனைப்பிலவு கிராமத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டிற்குட்பட்ட 20 பெண்களுக்கும் கோழிக்குஞ்சுகளை வழங்குவதற்கான நடவடிக்கையை முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் மேற்கொண்டுவருகிறது

இவர்களுக்கு ஒருமாதபராயமுடைய 25 கோழிக்குஞ்சுகள் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளதோடு முட்டையிடும் வரையிலான கோழியுணவும் வழங்கப்படவுள்ளன

சிறு கோழிக்குஞ்சுகளை பராமரிப்பதில் உள்ள சிரமத்தையும் இறப்பு வீதத்தையும் தவிர்க்கும் முகமாகவே இவர்களுக்கு ஒரு மாதக் குஞ்சுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சை

(பருத்தித்துறை)

யாழ் கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்டு வந்த முறைசாராக் கல்விப் பிரிவு வகுப்புகளின் 1992, 1993ஆம் ஆண்டுகளுக்கான இறுதிப்பரீட்சைகள் 10-07-93 தொடக்கம் 18-07-93 வரை நடைபெறவுள்ளன. இப்பரீட்சைகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் முறைசாராக் கல்விக்குரிய பாடநெறிகள் நடைபெற்ற பாடசாலைகளின் அதிபர்களுக்கு கல்வித்திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் தாம் முறைசாராக் கல்விநெறியைப் பின்பற்றிய பாடசாலை அதிபர்களிடமிருந்துபரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது. (25)

## மாவட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டி

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்து மாவட்ட நிலைச் சுற்றுப் போட்டியில் இன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் மாலை 3-00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகளில் 17வயது பிரிவில் கனகரத்தினம் ம.மகாவித்தியாலயத்தை எதிர்த்து வரணி மகாவித்தியாலயமும் 19வயது பிரிவில் மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியும் விளையாடும்.

அச்சுவேலி புனித திரேசா கல்லூரியில் மாலை 3-00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகளில் 17வயது பிரிவில் கன்னியர் மடம் த. ம.வி ஐஎதிர்த்து மெதடிஸ்த மகளிர் கல்லூரியும், 19வயது பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து மெதடிஸ்த மகளிர் கல்லூரியும் விளையாடும்.

வேம்படி மகளிர் கல்லூரியில் மாலை 3-00 மணிக்கு ஆரம்பமாகும் போட்டிகளில் 17வயது பிரிவில் சாவகச்சேரி றிபேக் கல்லூரியை எதிர்த்து வல்வை மகளிர் கல்லூரியும், 19வயது பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரியை எதிர்த்து சாவகச்சேரி றிபேக் கல்லூரியும். கனகரத்தினம்ம.ம.வி. ஐ எதிர்த்து யூனியன் கல்லூரியும் விளையாடும்.

## நினைவு கூருகின்றோம் ... 1993-07-09

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு-கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

★ **மதன்** (லோ. மதன்-அக்கரைப்பற்று-அம்பாறை)

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி-இராமநாதபுரம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டதமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு திருமலை - கல்லோயாப் பகுதியில் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட புகையிரதப் பகுதி ஊழியரான சண்டிலிப்பாயைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன். யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தமிழ்ப்பெண், குரும்பசிட்டி கற்பகப் பிள்ளையார் கோவிலடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஏறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு இயக்கச்சியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**2 ம் லெப். புலவன்** (பொன்னையா மதியழகன்-புதூர், மிலைதீவு-மட்டு)

**கப்டன் ஜெகதீசன்/டானியல்** (அருளம்பலம் கிருபாகரன்- 7 ம் வட்டாரம், சம்பூர், மூதூர்-திருமலை)

**லெப். வதனி** (பவானி சின்னன் - யோகபுரம், மல்லாவி, மாங்குளம்-முல்லைத்தீவு)

**தில்லானா** கௌரியம்மாகருப்புச்சாமி-பறங்கிசாளம்பன், ஆட்காட்டிவெளி, அடம்பன், வட்டக்கண்டல்-மன்னார்)

**கப்டன் ஈழவேந்தன்/சுப்ரா** (பாலசுந்தரம் சதீஸ்-மயிலிட்டி, காங்கேசன் துறை-யாழ்)

**கப்டன் இளையவன்/பாலு** அந்தோனிப்பிள்ளை செல்வகுமாரன், நவபுரம், கைதடிவடக்கு-யாழ்)

**லெப். குயிலி/வீமா** (இரவீந்திராதேவி தங்கராசா-நவக்கிரி, புத்தூர்-யாழ்)

**லெப். தமிழ்மாறன்** (நெல்லிநாதன் விவேகானந்தன்- அராலிவடக்கு, வட்டுக்கோட்டை.-யாழ்)

**லெப். சேந்தன்** (பரஞ்சோதி நிரஞ்சன்-கொக்கட்டித் தோட்டம், அல்வாய்வடக்கு, பருத்தித் துறை-யாழ்)

**லெப் சந்திரபவான்/அலோசியஸ்** (சுந்தரலிங்கம்மோகனதாஸ்-கொத்தியகாடு தொண்டமானாறு-யாழ்)

**லெப். செழியன்/சீனா** (இலட்சுமிகாந்தன் குமணன் (சீனுகாந்தன்) நடராசாவீதி, -வல்வெட்டித்துறை)

**2-ம்லெப். கேரனா** (வசந்தரூபி தில்லையம்பலம்-3-ம் குறுக்குத்தெரு, அராலிவீதி, பொம்மைவெளி-யாழ்)

**நகைமுகன்** (அருணகிரி சற்குணராசா-5ம்-வட்டாரம் வேலணை-யாழ்)

**குமாரவேல்/குட்டி** (சிவப்பிரகாசம் பிரம்மசீலன்-நீலியம்பனை ஒழுங்கை, மல்லாகம்-யாழ்)

**ஆதவன்** (குகதாஸ் திருமாறன்-புதுவளவு ஒழுங்கை, வல்வெட்டித்துறை)

**சொக்கன்/சின்னா** (கிறிஸ்ரி ராஜ்மோகன்-ஆலடிச்சந்தி, நல்லூர் வடக்கு-யாழ்)

**அறிவொளி** (தங்கலிங்கம் சிவகுகன்-அளவெட்டி வடக்கு -யாழ்)

**அன்பழகன்/பழனி** (கோபாலர் விஸ்வேஸ்வரன்-கருகம்பனை, கீரிமலை-யாழ்)

மட்டு-பெண்டுகள் சேனையில் 06 07-1992 அன்று எமது முகாமைச் சுற்றிவளைத்த சமரின்போது விழுப்புண் அடைந்து வீரச்சாவெய்திய.

**இளங்கோ** (செல்லத்தம்பி பாலச்சந்திரன்-பொருவில், மன்னம்பிட்டி பொலநறுவை)

மட்டு-வாழைச்சேனை - சந்திவெளிப்பகுதியில் முஸ்லிம் குழுவொன்றினால் படுகொலைசெய்யப்பட்ட 03 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6976)

# 'கலைமுகம்'

## ஓர் விமர்சனக் குறிப்பு

1993ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் திகதி தொடக்கம் 9ஆம் திகதி வரையும் நாட்டுக் கூத்து விழா திருமறைக் கலாமன்ற அரங்கில் நிகழ்ந்தேறியது. இந்தக் கூத்துவிழாவில் ஒன்பது நாட்டுக்கூத்துக்கள் கூத்துப்படுத்தப்பட்டன. இவ்விழாவின் சில நிகழ்ச்சிகளை 'ஆவணப்படுத்தும்' முயற்சியில் திருமறைக் கலாமன்றம் கலைமுகம் காலாண்டு கலை இலக்கிய இதழை வெளியிட்டுள்ளது.

தமிழ் ஈழத்தின் கூத்து வடிவங்களான மன்னார் பாங்கு, தென்மோடி, ஆட்டக் கூத்து, காத்தவராயன் கூத்து, முல்லைத்தீவுப் பாங்கு பற்றிய விளக்கக் குறிப்புகள் மற்றும் நேர்காணல், கவிதை இப்படி பல ஆக்கங்களுடன் நாற்பத்தாறு பக்கங்களில் கலைமுகம் வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது கலையமுதத்தை ஓவியர் ரமணியின் அட்டைப்பட ஓவியம் சற்று வித்தியாசமாகவும், உயர்ந்ததாகவும் தூக்கி விடுகின்றது. ஆயினும் பல வண்ண அட்டைப்படமும் உள்ளடக்கமும் கொழும்பில் அச்சு வாகனம் ஏறின என்பது வேறு விஷயம்.

இந்த இதழில் வணக்கம் என்ற தலைப்பில் ஆசிரியர் தனது உரையாக வெளியிட்டிருந்த கருத்தில் நாடக விமர்சனம் தேக்க நிலையில் இருக்கிறது என்று சொல்லித் தன் ஆதங்கத்தை வெளியிட்டுக் கொள்கிறார். அதில் -


""இவ்விதழ் அவ்விழாவின் (நாட்டுக்கூத்து விழா) சில கட்டங்களை ஆவணப்படுத்துகின்றது. அறுபதுகளிலும், எழுபதுகளிலும் எமது மன்றம் நாடகத் துறையில் ஆற்றியவைகளைப் பற்றிப் பேசவோ, எழுதவோ முடியாத நாடக விமர்சகர் பலர் உண்டு. அவர்களுக்கு ஆதாரப் பத்திரங்கள் இல்லையே என்று சாக்குப் போக்குச் சொல்லப்படுகிது. அவைகளைத் தேடி எடுப்பது தான் ஆய்வாளர்களின் கடமை என்பதை அவ்வறிஞர் மறந்து விடுகின்றனர். அதே நிலை இன்றைய பாரிய கலை முயற்சிகளுக்கும் நேரக்கூடாது என்று பெரிதும் விழைகின்றோம்'' என்று அனுமானித்துள்ளார். என்ன துரதிர்ஷ்டம். இதழ் ஆசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் கருத்துடன் ஒத்துப்போகாவிட்டாலும் அனுதாபப்படத்தான் முடிகிறது.

அறுபது எழுபதுகளைப் பற்றிக் காலம் தாழ்த்திப் பேசுவது தலைவலி வரும்போது எனது தலையா வலிக்கிறது என்று கேட்டுக்கொள்வது போல் இருக்கிறது. மேலும் எல்லா விமர்சனங்களும்ஏதோ ஒரு சந்தர்ப்பத்தை ஒட்டித் தான் எழுதப்படுகின்றன. எழுதமுடியாத நிலைக்கு வேறு காரணங்களும் இருந்திருக்கலாம். எதற்தும் விலக்குண்டு. நடைமுறையில் ஒரு கால கட்டத்திய நாடக அனுபவம் மக்கள் மனதில் வேரூன்றி, அதன் ஆணிவேர் அறாமல் இன்னொரு அனுபவ வடிவமாக மக்களிடம் சென்றடைகிறபோதே ஆவணப்படுத்தும் பாணி முழுமையாகும். எது எப்படியாயினும். பல்கலைக் கழகத்திலோ புறத்திலே ஆய்வு மேற்கொள்பவர்கள் திருமறைக்கலா மன்ற நாடகங்களையும் ஆய்வுப் பொருளாக ஏற்றுப் பயன்பெற வேண்டும் என்பதற்கு எவரும் மறுப்பல்ல.

அக்கறையோடு சேகரித்துக் கலைமுகத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கூத்து விழாப் படங்களும் ஆவணப்படுத்தும் அடிகளாரின் முயற்சியில் முதன்மை பெறுகின்றன. ஆனால், மற்றாஸ்மயிலின் கண்ணகி வழக்குரையின் கீழ் 'பவளக்கொடி கூத்திலிருந்து' என்றும், பவளக் கொடிப்படத்தின் கீழ் 'கண்ணகி வழக்குரைகூத்திலிருந்து' என்று அடிக்குறிப்புப் போட்டிருப்பதும், இரு கூத்து மரபுகளையும் வேறுபடுத்திப் பார்க்கும் அடிகளாரின் கூத்துமரபை அவசரகோலம் மறைத்து விட்டதோ என்று எண்ணத் தோன்றுகின்றது உண்மையில் இது பவளக்கொடியை மேடைப் படுத்தியவர்களுக்கும் மற்றாஸ்மயிலுக்கும் ஒரு தண்டனைதான். ஒரு தனிமனிதனின் அவசர கோலத்துக்கு ஒரு சோற்றுப் பதமே போதும் என்று நினைக்கிறேன்.

**மதன்**

(8ஆம் பக்கம் பார்க்க)




# வெடிப்பொருள்களுடன் விபரீதவிளையாட்டு தன்னையும் பிறரையும் அழிக்கும் செயல்

எதிரிகளால் எமது இனத்திற்கு ஏற்பட்டு வரும் இன அழிவுகளுடன் நம்மவர் சிலர் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்வதால் ஏற்படும் அழிவுகள் அண்மைக் காலங்களில் அதிகரித்துவருவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறு இவர்கள் நடந்துகொள்வதால் அது தம்மையும ஆபத்திற்குள்ளாக்குவதுடன்தமது நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலவர்களையும் ஆபத்திற்குள்ளாக்கும் என்பதை இவாகள் ஏனோ சிந்திக்க மறந்து விடுகின்றனர்.

இத்தகைய கோர நிகழ்வுகளை தொடர்பு சாதனங்கள் ஊடாக எம் மக்கள் அறிந்து வருகின்றனர். சிறிலங்கா அரசின திட்டமிட்ட பொருளாதாரத்தடையால்எம்மிடையே இதுபோன்ற செய்திகளைஅறிந்து கொள்ள கிடைக்கும் ஒரே சாதனம் இப் பத்திரிகைகள் தான். இது பெரும்பாலான மக்களை தினமும் சென்றடைகின்றபோதிலும் சம்பவம் தொடர்வது வேதனை தருகிறது.

நான் ஒரு செய்தியாளன் எனறமுறையில் பத்திரிகையில் எழுதப்படுபவற்றை விட, இக் கோர சம்பவங்கள் நிகழ்ந்தபின் ஸ்தலத்தில் அவதானிப்பவை பெரும் கொடூரமான காட்சிகளாக இருப்பதை நேரில் அவதானித்துள்ளேன்.

தமிழீழமெங்கும் தொடரும் யுத்தத்தின் போது எதிரியானவன் கண்மூடித்தனமாக தமிழீழப் பிரதேசங்களுக்குள் எறிகணைத் தாக்குதல்களையும், துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்து வருகிறான். அவற்றில் பெரும்பாலானவை இன்று வரை கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு தமிழீழ மண்ணிற்குள் வெடிக்காத நிலையில் புதையுண்டும், மறைந்தும் கிடப்பதை அனைவரும் அறிவர்.

எதிரியைப் பொறுத்தவரை அவன் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்காக மட்டும் இவற்றை தமிழீழ பரப்பிற்குள் ஏவவில்லை. ஒட்டுமொத்தமாக தமிழீழ மக்களை அழிப்பதே அவனது நோக்கமாகவுள்ளமை வெளிப்படையாக அனைவரும் அறிந்த உண்மை.

மக்கள் குடியிருப்புகள் மீது நேரகாலம் பாராது நள்ளிரவு வேளைகளில்கூட முகாம்களில் இருந்தவாறு எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு ஏவப்படுவதில்பல வெடிக்காத நிலையில் எம் மண்ணிற்குள் மறைந்து கிடப்பதை யாரும்அறியாதவரல்ல.

இன்று நாம் அனைவருமே ஒரு போராட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் எறிகணைகள் என்றால் என்ன, மிதிவெடிகள் என்றால் என்ன, துப்பாக்கி ரவைகள் என்றால் என்ன என்று நன்றாக அறிந்திருக்கிறோம். இவை வெடிப்பதால் ஏற்படும் விளைவுகளைப் பற்றி தினமும் தொடர்புசாதனங்கள் வாயிலாகவும் அயலவர்கள் மூலமாகவும் சிலவேளைகளில் நேரடியாகவும் அறிந்திருக்கிறோம். அப்படியிருந்தும் நமது சிறுவர்கள், இளைஞர்கள் இவற்றைக் கண்டெடுப்பதும், அவற்றைப் பரிசோதிக்க முற்படுவதும் அறியாமை என எளிதில் கூறிவிட முடியாது.

அவற்றை கல்லினால் குத்திப்பார்ப்பதாலோ, கையில் எடுப்பதாலோ, மின்சாரம் பாய்ச்சிப் பார்ப்பதாலோ வெடிப்பதற்கான வாய்ப்புகள் பெருமளவில் காணப்படுகின்றன.

இவ் இளைஞர்கள் இவற்றைப் பரீட்சித்துப்பார்ப்பதன் மூலம் இதிலிருந்து எதனைப் பெற முயல்கின்றனர் என்பதையே இன்றுவரை அறிய முடியாமல் உள்ளது ஏனெனில் பரிசோதித்தவர்கள் உயிருடன் இல்லாமல் சிதறிப் போகும் நிலையே காணப்படுகிறது.

அண்மையில் ஆனைக்கோட்டைப் பகுதியில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் நடைபெற்ற இதுபோன்ற ஒரு சம்பவத்தை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. சம்பவ இடத்தை நெருங்கும்போதே வீதிகளில் ஆண்களும், பெண்களும் இளைஞர்களும் நின்று இச்சம்பவத்தைப் பற்றி தமக்கிடையே கதைத்துக்கொண்டிருந்தனர் அவர்களை விலக்கிக்கொண்டு சம்பவ இடத்தை நெருங்கிய போது அழுகுரல்கள் கேட்டன சிறுவர்கள் முதல் வயோதிபர்கள் வரை வயது வேறுபாடு மற்றும் உறவுமுறை இன்றியே மண்ணில் புரண்டு புரண்டு கதறி அழுதவாறு இருந்தனர். ஓலைக் குடிசை எரிந்து சாம்பராகக் காணப்பட்டது. அதனைச்சூழவுள்ள பகுதிகளில் உடல் ஒன்று சிதறிய நிலையில் ஆங்காங்கே அடையாளம் காணமுடியாத நிலையில் கிடந்தது.

சம்பவத்தைப்பற்றி அங்கு காணப்பட்டவர்களிடம் வினவியபோது எவருக்குமே என்ன நடந்ததென்று தெரியாது. ஆமி அடித்த ஷெல் வந்து வீழ்ந்து வெடித்தது என்றார் ஒருவர். ஏற்கனவே வீட்டிற்குள் கிடந்த ஷெல் வெடித்திருக்க வேண்டும் என்றார் மற்றவர். கிணறுக்குள் கிடந்த ஷெல்லை எடுத்து வந்து சைக்கிள் டைனமோவில் இணைத்து மின்சாரம் பாய்ச்சிய போது வெடித்தது என்றார் இன்னொருவர். இவ்வாறு சம்பவம் நடைபெற்றதற்கான காரணத்தைஉடன் அறியமுடியாவிட்டாலும் விளைவுகளை நேரில் காண முடிந்தது.

சம்பவம் நடைபெற்றபோது அதிர்ஷ்டவசமாக அக்குடும்பத்தவர் எவரும் வீட்டிற்குள் இருக்கவில்லை ஆனால் வீட்டின் சுற்றுப்புறங்களில் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்த சிறுவர் முதல் குடும்பஸ்தர் வரையான ஐவர் படுகாயமடைந்திருந்தனர். இதில் குடும்பஸ்தர் ஒருவரது தலைபிளந்த நிலையில் காணப்பட்டது.

இச்சம்பவத்தை அவதானிக்கும்போது ஓர் உண்மை மட்டும் புலப்படுகிறது. ஒருவர் தெரிந்தோ தெரியாமலோ செய்யும் இத்தகைய வேண்டத்தகாத செயலால் அவர்மட்டுமன்றி அயலவர்களும் பெருமளவில் பாதிப்பிற்கு உள்ளாகின்றனர். இதன்விளைவாக சிலர் பரிதாபகரமான முறையில் மரணத்தைத் தழுவிக்கொள்ளவும், பலர் அங்கவீனமடையவும் நேரிடுகிறது என்பதை ஏனோ இதில் சம்பந்தப்படுபவர்கள் சிந்திக்கத் தவறுகின்றனர். இவர்களின் சிந்தனையில் ஏற்படுகின்ற இத்தவறு எத்தனை குடும்பங்களின் எதிர்காலத்தையே சூனியமாக்கி விடுகின்றது பல பெற்றோரின் எதிர்பார்ப்புகள் கூட இதனால் சிதறடிக்கப்பட்டு விடுகிறது.

இனிமேலாவது இத்தகைய சம்பவங்கள் எமது மண்ணில் நிகழாது இருப்பதற்கு நாம் அனைவரும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இது குறித்து விசேட கவனமும் செலுத்த வேண்டும்.

இதன் முதல் கட்டமாக பாடசாலைகளில் ஆசிரியர்கள் தமது மாணவர்களிடையே இது தொடர்பாக ஏற்படும் விளைவுகளை எடுத்துக் கூறுவதன் மூலம் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் இத்தகைய செயல்களில ஈடுபடுவதை தடுத்து விட முடியும். அத்துடன் இதில் பெரும் பங்கு பெற்றோருக்கே உண்டு. ஏனெனில் இதனால் ஏற்படும் விளைவுகளை அவர்களே நேரடியாக அனுபவிப்பவர்கள். எனவே பெற்றோர் இது தொடர்பான விபரங்களையும் இவற்றால் ஏற்படும் விளைவுகளையும் தமது பிள்ளைகளுக்கு அடிக்கடி எடுத்து கூறுவதுடன் இவற்றைக் கண்டால் இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கொடுத்தல் வேண்டும். இவற்றின் மூலம் இத்தகைய சம்பவங்களால் ஏற்படும் அநியாய இழப்புகளை தவிர்க்கக் கூடியதாக இருப்பதுடன் விடுதலைக்கும் பங்களித்தவர்கள் என்ற பெருமைக்கும் உரியவர்களா வீர்கள்.

**-சசீகரன்**

# தாயக பாரம்பரியமா? தங்குமிட கலாசாரமா?

# பாரிஸ்வாழ் தமிழர்கள் மத்தியில் குழப்பம்!

## ஒரு பிரெஞ்சு பத்திரிகையின் பார்வையில்....

கடந்த சில வருடங்களாக புலம் பெயர்ந்த தமிழர்களின் சமூகத் தேவைகளுக்காக பாஓபோர்க் செயிற் டெனிஸ் (Faubourg Saint Denis) வீதியில் அமைந்த கடைகள் தமிழர்களது கைக்கு மாறிவிட்டன. இது இந்தச் சமூகத்தவர்களின் நடமாட்டங்களுக்கும், பேச்சு வழக்குத் தொடர்பு சாலையாகி 'குட்டி இந்தியா' வாகக்காட்சியளிக்கிறது. மிகத் தெளிவாகச் சொல்வதானால் இது ஒரு பரஸ்பர கொடுக்கல் வாங்கல்களுக்கான அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, கலாசாரம் என்பன இங்கே கிடைக்கின்றன. அவர்களது தேசவழமையான விருந்தோம்பல்களை இவர்கள் தொடருகின்றார்கள்.

இந்தியாவில் தமிழ் நாடு, இலங்கை, மலேசியா, பிஜூஜி, மொறீசியஸ், றியூனியன் முதல் மடகஸ்கார் வரை, தெற்குஆபிரிக்கா, குதலோப், குயான் போன்ற பல இடங்களில் தமிழர்கள் வாழ்கிறார்கள். பிரான்சில் சில தமிழர்கள் மடகஸ்கார், மொறீசியஸ், பிரஞ்சுக்காரராகக் கருதபபடும் றியூனியன், குதலூப் ஐச் சேர்ந்தவர்களும் தங்கி வாழ்கிறார்கள். ஆயினும் இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் மிக அதிகமாக புகலிடதரிப்பிடமாக்கி விட்டனர். இங்கு எல்லாமாக 80,000ற்கு மேற்பட்ட தமிழர்கள் தங்கி வாழ்கிறார்கள்.

''23 நூற்றாண்டு காலமாக வித்தியாசப் படாத மொழியாகவும், நிச்சயமாக எழுத்துரு கொண்ட மிகப்பழைய மொழியாகவும்உலகில் இடம் பெற்று தனித்துவம் பெறுகிறது ''தமிழ்'' என்று சொல்பவர் பாண்டிச்சேரியைச் சேர்ந்த மேற்கு மொழி வல்லுநரான முடியப்பநாதன் 'தமிழை சமஸ்கிருதத்துடன் தான் ஒப்பிட முடியும். இம்மொழியின் இலக்கிய வளம் பற்றி பிரான்ஸ் முன்பே அறிந்துள்ளது' என்றுமேலும் அவர் குறிப்பிடுகிறார்.

சாதீயம் என்பது சமூக ரீதியாக வன்மையகத் தொடரப்படும் ஒரு வழமை. பாரம்பரிய ரீதியாக பிராமணர் அல்லது படித்த அறிவாளிகள் முதன்மைஸ்தானத்தைமொழியூடாகப் பெறுகின்றனர். பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து இப்போது பேசப்படும் தமிழ்மொழி குறிப்பிடத்தக்க அளவில் விலகியுள்ளதைக் காணலாம். மொழிவளம் பற்றிய தகவல்கள் ஒருபுறம் இருக்க. இங்கு வார இதழாக வெளிவரும் 'ஈழநாடு' (பாரிஸ், ஜேர்மன், கனடாப் பதிப்புக்களாக) இலக்கியத் தன்மை இல்லாமல் வெறும் தகவல் பரிமாற்றச் செய்திகளைக் காவியவாறு ஐயாயிரம் பிரதிகளை அதிரடியாக விநியோகிக்கிறது.

பாண்டிச்சேரி வாசிகள். இலங்கை வாசிகள் பேச்சுத் தமிழின் ஏற்ற இறக்கங்கள், தந்திரத்தன்மையான தொனி மூலம் வேறுபாட்டைக்கொண்டுள்ளார்கள். இலங்கை வாசிகள் எங்கள் மொழி வழக்கில் 'மிகவும் தூய்மையாகக்கதைப்பதாக' அதாவது ஆங்கிலேய ஆட்சியால் பிரதியீடு செய்யப்பட்ட வாக்கிய வடிவங்களை பாண்டிச்சேரியை விடவும் தாம்நன்றாகக் கதைப்பதாகக் கூறுகின்றனர். இப்படி மார்தட்டும் இவர்கள் நேர்மாறாகச் சென்னையிலிருந்து வெளிவரும் சினிமா, பாடல்கள் என்பவையே பாக்கு நீரிணைக்கு அப்பாலும், இப்பாலும் தரமான தமிழ்' எனச் சொல்கிறார்கள்.

பாண்டிச்சேரி வாசிகள், இந்தியாவிலிருந்து முதலில் வரும் போது அங்கேயே தாய்மொழியை நிராகரித்து. பிரெஞ்சு மொழியூடாக வாழ்ந்தவர்களாக இருந்தவர்கள் இவர்கள் நிர்வாக மற்றும் அதிகார வேலைகளுக்காகஒப்பந்தஅடிப்படையில வரவழைக்கப்பட்டவர்கள். ஆனால் இவர்கள் மீளவும் இந்தியா திரும்ப நாட்டம் காட்டவில்லை. இப்போது இவர்கள் கடந்தகாலத்தை மறுதலித்து எதிர்காலத்திற்காக வினாவி நிற்கின்றார்கள்.

ஒருவர் சொல்கிறார் 'நாங்கள்நிச்சயமாகபிரெஞ்சுக் கலாசாரமும் இல்லாமல் தமிழ்க் கலாசாரமும் இல்லாமல் தத்தளிக்கின்றோம்'. இந்தச் செயற்பாடுகள் கணவன் மனைவியரிடையே விரிசலைத் தோற்றுவிக்கின்றது. குடும்பத்தில் ஆணாகப்பட்டவர் புதிய உலக சஞ்சாரியாகவும், பெண்ணாகப்பட்டவர் மிகவும் பழமையான கட்டுப்பட்டித்தனத்துள் மூடியநினைவுகளுடன் இருக்கவும் வாழ்க்கை அமைகின்றது.

முழுமையானபிரெஞ்சுவாழ்வுக்கு மாறிய ஒருவர் அலுவலகம் செல்ல, அவரது வீட்டு நடவடிக்கைகள் 'தமிழ் வட்டமாக' மூடி விடுகிறது. வீட்டு நிர்வாகியான பெண் சாதிய மனோபாவங்களைக் கடைப்பிடித்துக் கொண்டு திருமண விஷயங்களில் முடிவு செய்கிறாள். இது மூடநம்பிக்கைகளும், நவீனத்துவமும் ஒருங்கே கொண்ட வாழ்வின் நீச்சல் போலானது. குடும்பத்தலைவி வேறுசமூகத்துடன்தனதுமகன் இணைவதற்குத் தடைக் கல்லாக இருப்பதுடன், பூர்வீக பாரம்பரியத்துடனான பெண் தேடி இந்தியாவுடன் தொடர்பு கொள்கிறாள். தன் வாழ்வின் அனுபவங்களை வைத்து மகனின் வாழ்வை வழிகாட்டுவதாக நிர்ப்பந்திக்கிறாள்.

புத்திசாலிகள், அதிக சுயாதீன நாட்டம் கொண்டோர் மேற்படியான அமுக்கச் சூழலில் அகப்படாமல் தமது திருமண வாழ்வைத் தீர்மானிக்கிறார்கள். சிலர் ஒருவிதத் தந்திரத் தன்மையுடன் முழுமையான சுதந்திரத்தன்மையைக் காட்டாமல் சாதீயத்தைக் கடைப்பிடித்துக் கொண்டு காதலிக்கிறார்கள். குடும்பத் தொடர்புகளையும் பாரம்பரியங்களையும் விட்டொழிக்காதவாறு மிகவும் உயர் தந்திரத்துடன் செயல்படும் இவர்கள் ஈனவும் முடியாமல் நக்கவும் முடியாமல்' தவிக்கிறார்கள். ''அப்படி அருகில் செல்லும் வேளைகளில் சகலதையும் மறந்து விடுகிறோம்'' என்றார் ஒருவர்.

ஒரு குசினியில், பாசுமதி அரிசிச்சாக்கை நிமிர்த்தித் திறந்தால் நாளாந்தப் பாவனைக்கான உணவாகக் கரையும்.

ஒரு கூடை காய்கறி, கறிவேப்பிலை, சமையல் திரவியங்களென (சரக்குச் சாமான்கள்) குசினி நிரம்பியிருக்கும்.

இவ்வகையான பொருள்களை விற்கும் பாஓபோர்க் செயிற் டெனிஸ் வீதியில் உள்ள கடைகளை நோக்கி ஸார்செல்ஸ்/ Sarcelles/ விலயர் ஸ்லு-பெல் [Villiers-Le - Bel] காஜ்-லெஹோனேஸ் [Garges Les-Gones] ஆகிய பகுதிகளில் அதிக அளவில் வாழும் பாண்டிச் சேரிவாசிகள் மையப்படுகின்றார்கள் இவ்வகையில் இது 'குட்டி இந்தியா'வாகின்றது. இவ்விடயம் வெறுமனே ஒரு சந்தையாக இல்லாமல் இவர்களின் சந்திப்புக்கும் மறந்து போகும் தமிழர் நினைவுகளை மீட்டெடுக்கும் மையமாகித் திகழ்கிறது.

இலங்கை வாசிகள் தங்களை விடவும் துணிச்சலானவர்களாக இருக்கின்றார்கள்- என்கிறார் ஒரு பாண்டிச்சேரித் தமிழர். இவர்களில் சிலர் வருமானமற்றவர்களாக இருந்தால் அவர்களது மனைவியர் வேலைக்குப் போவார்கள் என்கிறார் இலங்கை தமிழர் பற்றிய தனது பார்வையாக வேறொருவர். ஆங்கிலேயக் காலனியில் இருந்து வந்த இலங்கைத் தமிழர் பிரஞ்சுக் காலனியிலிருந்து வந்த எங்களுடன் விரைந்து உறவைப் பலப்படுத்தினார்கள். அவர்கள் மூடப்பட்ட சேரி வாழ்வுக்குள் [Ghetto] முடக்கப் படாமல் இருக்க நாம் வழி காட்டினோம்.

பாண்டிச்சேரி வாசிகளை நோக்கி ஆழமாக தமிழ்க் கலாசார ஈடுபாடு கொண்டோர்; இலங்கைத்தமிழர்; இந்துமத ஈடுபாடு கொண்டோர் கவரப்படுகின்றார்கள் ஆனால் பாண்டிச்சேரிக் காரரோ 'கடைசி பஸ்ஸை தவறவிட்டவர் கதி போல்' [கலாசார தொடர் வண்டியின் கடைசிப் பெட்டியையும் தவறவிட்டது போல்] பரிதவிக்கிறார்கள்.

மத ஈடுபாடு தமிழுணர்வை மீட்படைய வைக்கிறது. இந்துக்களின் இசையின் கடைசியில் தூண்டப்படும் பரவ உருக்கத்தை பா ஓ போர்க் செயிற் டெனிஸ் இல் அமைந்த விற்பனை மையங்களின் காட்சியில் உள்ள விஷ்ணுவின் கசெற்றுக்கள் காட்டுகின்றன. இந்தச் சிதறுகண்டசமூகத்தை மீளவும் கட்டியெழுப்ப கலையின் பாகங்கள் உதவுகின்றன.

குட்டி இந்தியாவில் தமிழர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களுடன் ஆயிரக்கணக்கில் அடுக்கிவைக்கபட்ட கசெற்றுக்களும் காட்சி அலுமாரிகளில் வைக்கப் பட்டுள்ளன. இந்தக் கசெற்றுக்களில் அடங்கும் கதை, பாடல், நடனம், இவற்றை பிரமாண்டமாக உற்பத்தி செய்து விநியோகிக்கும் மையமாக சென்னை இருக்கிறது பாண்டிச்சேரி மொறீசியஸ் தமிழர்கள் தொடர்ச்சியாக இசை கேட்பதிலும், தொடர்ந்து ஒரேமாதிரியான வீடியோ படங்களைப்பார்ப்பதிலும் பொழுதைக் கழிக்கிறார்கள். இவர்கள் தத்தமது விருப்ப கதாநாயக, நாயகிக்கான அணிகளில் (உ+ம் குஷ்பு ரசிகர்கள்) ஒன்று சேர்கிறார்கள்.

மதரீதியாக புனிதமாகக் கருதப்படும் 'பரதநாட்டியம்' இப்போது சமூக விருப்பத்திற்காக பலராலும்கற்றுக் கொள்ளப்படுகிறது. பரதநாட்டியத்தில் நன்கு பயிற்சி பெற்ற பாண்டிச்சேரி தமிழர்களிடம் றியூனியன், இலங்கையைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் பரதநாட்டியம் பயில வருகிறார்கள்.

இச்சந்தர்ப்பங்கள் சிறுவர்களுக்கு தாய்மொழி அறிவை மீளவும் பெற வாய்ப்பாக அமைகிறது ஆனாலும் சிலர் தவறி விடுவதுண்டு. இந்த வருடம் (1992) 52மாணவர்கள் உயர்கல்விப் பரீட்சையில் தமிழை வாய்மொழிப் பாடமாக எடுத்துள்ளார்கள். இந்தப் புதிய எழுத்து மீதான ஈடுபாடுமுன்னர் அமைதியாக இருந்த இவர்களிடம் தமது பாரம் பரியத்தையும், மூன்றாம் தலைமுறையினரின் வாழ்வையும் நினைவூட்டி ஈர்ப்புறச் செய்துள்ளது.

Le Monde இதழில் Jen -Louis Perrier எழுதிய கட்டுரை தமிழில் சுருக்கமாகத் தொகுக்கப்பட்டது.
தொகுப்பு:பாலன், அநாமிகன்

---

சங்கானை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## கணக்குப் பதிவாளர் 301/9

## பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்கு லிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்,

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம்(உயர் தரம்)/க.பொ.த(உயர்தரம்) இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

**வயதெல்லை:**

21 - 40 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது)

**சம்பளத் திட்டம்:**

301/9 — 905 - 1605 / 40 x 5 - 50 x 10

இத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்று நிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரியும் பணியாளர்கள் தமது சங்கத்தினூடாகவே விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்.

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 24-07-93 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக ''தலைவர், சங்கானை ப. நோ. கூ. சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால்மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்
சங்கானை ப. நோ. கூ. சங்கம்,
சங்கானை.

07-07-1993

(சி/6982)

சிறுகதை

# அர்த்தமற்ற அநுதாபங்கள்

"குரும்பசிட்டியூரான்"

அடுக்களையை வந்து அம்மா எட்டிப் பார்க்கிறா. ஆக்கின சோறு கறி அப்பிடியே கிடக்கிறது.

''இந்தப் பஞ்ச காலத்திலை இப்பிடிக் காச்சிக் கருக்கிப் போட்டுக் கொட்டிற தெண்டா முடிவென்ன...? எழும்பிச் சாப்பிடுங்கோ...''.

எனக்கு வெட்ட வெளிச்சம். சொன்ன அம்மாவும் இண்டைக்குச் சாப்பிடப் போறதில்லை. நாங்களும் அப்பிடித்தான்! பசியும் பாசமும் இந்த வீட்டிலை ஒரே தட்டிலைதான்!

''கண்ணன்... சிவபாலு... சரசு''

டாப்புக் கூப்பிடுற மாதிரி...நாங்க ஆருமே எழும்பையில்லை!

''சாப்பிடாட்டா இருங்கோ. எனி இந்த வீட்டிலை உலை வைச்சாப்பாப்போம்''.

இது வெருட்டெண்டது எனக்கல்லோ விளங்கும். அழுது தீர்க்க முடியாத கவலையளைத் தன்ரை அடிமனதுக்கை புதைச்சுப் போட்டு, பொய்க் கோபத்தை எங்களுக்கு விதைச்சுக் காட்டிறா! நிண்டு பாத்திட்டு... வேப்ப மர நிழல்லை வந்து அம்மா இருக்கிறா. ஒரு காப்பிலையைக் கிழிச்சு அதுக்குள்ளை சச்சையும் ஒடிசருகையும் அடைஞ்சு... உறுட்டிப் பிரட்டி... ஒரு சுறுட்டாக்கி...புக்குப் புக்கெண்டு புகை விடுறா. பச்சைத்தண்ணியைக் குடிக்க அவவின்ரை பசி இனி அடங்கியிடும். பானையுக்கை பருக்கை இல்லாத எத்தினையோ ராவுகளிலை அம்மா இப்பிடித்தான் செய்யிறவ!

சரசுவைப் பாக்கிறேன். கன்னத்திலை கண்ணீர்க் கோடுகள். முகம் நல்லா வாடிப் போய்க் கிடக்கு. எங்களோடை சேர்ந்து இந்தப் பத்து வயதுப் பெட்டையும் ஏன் பட்டினி கிடக்க வேணும்?

''சரசு! சின்னப் பிள்ளையள். பசி கிடந்தா குடல் சுறுண்டு போவிடும். கொஞ்சத்தை யெண்டாலும் சாப்பிடம்மா...''

''எங்கடை வீட்டிலை இப்படி நடந்துதெண்டா... நீங்கள் சாப்பிடுவியளோ?''

சரசு என்ரை வாயை அடைச்சுப் போட்டாள். வறுமைக்குள்ளும் செல்லமா வளர்ந்த பெட்டை. அவளின்ரை முகத்தைத் துவாய்த் துண்டினால் துடைச்சு விடுகிறேன். அவள் சொன்ன மாதிரி இந்த வீட்டிலும் ஒரு செத்த வீடு! பிரேதம் இல்லாமை... பந்தல் தோரணம் எதுவுமே இல்லாமை.. எங்கடை கண்ணீர்ப் பந்தலோடை ஒரு செத்த வீடு!

''விசாகன் அண்ணா செத்ததெண்டதை நினைக்க என்னாலை நம்பேலாமைக் கிடக்கண்ணா...''

எனக்கும்தான். கண்ணைத் திறந்தாலும் அந்த அண்ணாவின் உருவம் தான்... கண்ணை மூடினாலும்... அந்தக் கெம்பீரமான தோற்றம்தான்.

''கடவுளே... இந்தக் கதையெல்லாம் பொய்யாகிப் போகாதோ...?''

அவளைப் பாத்து பரிதாபமாகச் சிரிக்கிறேன்.

''பொடியைக் காணதவரை அவரைச் செத்ததெண்டு சொல்லிறதை நான் நம்பேன்... கடைசிவரை நம்பேன்..''

என்னிலும் பாக்க என்ரை தங்கைச்சி விசாகன் அண்ணாவிலை வைச்சுக்கிற பாசத்தை நினைக்க நினைக்க என்ரை நெஞ்சுக்குள்ளை என்னவோ செய்யிற மாதிரி.. சோகத்திலையும் ஒரு சந்தோசத்திலை அவளைக் கட்டிப் பிடிச்சுக் கொஞ்சுகிறேன்.

''விசாகன் அண்ணா செத்திருப்பார் எண்டதை நீங்கள் நம்பிறியளோ?''

அவளின்ரை ஒரு திருப்திக்காக... 'இல்லை' என்றொரு தலைஅசைப்பு!

''எடுத்த வேலை முடிச்சுத்தான் என்ரை உயிர் போகும்'' எண்டு அடிக்கடி சொல்லுவரே...''

உண்மைதான் விசாகன் அண்ணா எங்கடை வீட்டை வந்து கதைக்கிற ஒவ்வொரு கதையளையும் இந்தக்குட்டிப் பெட்டை மனதுக்கை ரேப் பண்ணி வைச்சு... அவளின்ரை கெட்டித்தனத்தை அங்குலம் அங்குலமா நான் அளக்கிறேன். இத்தனைக்கும் விசாகன் அண்ணா எங்களுக்கு உறவுக்காரனுமல்ல... சொந்த ஊர்க் காரனுமல்ல... சிலர் அவரைப் புதுக்குடியிருப்பான் எண்ணுவினை... வேறு சிலர் புல்மோட்டையான் எண்ணுவினை... எந்த மண் எண்டாத்தான் எங்களுக்கென்ன...? ஊர்க்காரன்.. உறவுக்காரன் எண்ட சொல்லுகளுக்கும் மேலாலை நிண்டு நாங்க அவரை நேசிச்சோம். அந்த உறவு உருவாகினதே ஒரு தனிக்கதை.

★

இந்தியப் படையள் எங்கடை மண்ணை ஆக்கிரமிச்ச நேரம். எங்கடை மாதா கோவிலுக்குப் பின்னாலை இருந்த ஒரு பாழடைஞ்ச வீட்டுக்கை பெடியள் சின்னனா காம்ப் போட்டிருந்தினம். பகல்லை இந்த வீட்டுக்கையும், இரவிலை அந்த வீட்டுக்குப் பின்னாலை இருந்த மரவள்ளித் தோட்டம்தான் அவைக்குப் பாதுகாப்பான படுக்கை அறை! சாக்குகளை விரிச்சுப்போட்டு ஈரமண்ணுக்கைஇரவு முழுவதும் கிடந்து பட்ட துன்பங்கள்! சண்டைப் புதினங்கள் அறியிற ஆசையிலை அம்மாவுக்குத் தெரியாமை அந்தக் காம்புக்கு அடிக்கடி நான் போய் வந்துகொண்டிருந்தேன். ஒரு நாள் நல்ல மழை நேரம். மழைசோனா வாரியாய்ப் பொழிஞ்சு தள்ளிக்கொண்டிருந்தது. மழைக் கூதலும் குளிர் காத்தும் ஈரல்குலையை குத்தி அறுத்த மாதிரி. அந்த மழையுக்கை...அந்த நாற்சார் முத்தத்திலை நிண்டு பீலியாலை வந்து விழுந்து கொண்டிருந்த மழைநீரை ஒரு அண்ணா ஏந்திஏந்தி தன்ரை தலையிலை வார்த்துக்கொண்டிருந்தார். அவர் புதுஆள். கறுத்த உடம்பு... நல்ல உயரம். முகத்திலை நல்ல கனிவு இருந்தது. இந்த நேரத்திலை எனக்கு நாலு துமி பட்டாக் காணும், அம்மா துவாயாலை என்ரை தலையைப் போட்டு உரஞ்சு உரஞ்செண்டு உரஞ்சிப் போடுவ. உள்ளூர்த் தம்பி ஒருத்தன் நீல நிற பிளாஸ்ரிக் வாளியுக்கை ஏதோ கொண்டுவந்து வைச்சிட்டு மழைக்கு உள்ளுக்கைவந்து ஒதுங்கிக் கொண்டான். அது சாப்பாடாத்தான் இருக்க வேணுமெண்டு ஊகிச்சேன். தோஞ்சிட்டு வந்த அந்த அண்ணா சாப்பிட எண்டு இருந்தார். எட்டிப்பார்த்தேன்... வாளியுக்கை பழஞ்சோறும்.. ஒரு கிண்ணத்துக்கை இடிச்ச சம்பலும்...! என்னாலை பொறுக்கையில்லை. கேட்டே விட்டேன்.

''மழைத் தண்ணியிலை தோஞ்சு போட்டு பழஞ்சோற்றைத் திண்டா சன்னி வருமல்லோ...?

கேட்டு விட்டு அண்ணாவைப் பார்த்தேன். அவர் சிரிப்பொண்டைச் சத்தம் வராமைக்குச் சிரித்தார்.

''தம்பி! பொறுத்த சுத்தி வளைப்புகளுக்கை புளியங்கொட்டைகளைத் திண்டு போட்டும் நாள் கணக்கா அடிபட்டிருக்கிறோம்...நல்ல தண்ணிக்கு நாவறண்டு தவிச்சிருக்கிறோம். எங்களை நாங்கள் பழக்கி வைச்சிருக்கிறோம். இது எங்களுக்கு சாதாரணமானதுதான்...''

சொல்லிவிட்டு அடுத்த குழையலை ஆசையோடை தன்ரை வாயுக்கை போட்டுக் கொண்டார்.

''ரண்டு நாளா எங்களுக்குச் சாப்பாடு கிடைக்கையிலலை. எங்களுக்குச் சாப்பாடு கொண்டு வந்த ஒரு தம்பியை ஆரோ ஒரு ஈனப் பிறவி காட்டிக் கொடுத்ததிலை ஆமிக்காரர் சுட்டுக் கொழுத்திப் போட்டாங்கள்''.

அந்த அண்ணாவின் கண்கள் கசிந்திருந்தன. அந்த அண்ணாவுக்காக நான் கவலைப்பட்டேன். அண்டைக்குஇரவுக்குஅம்மாவைக்கொண்டு ஆவி பறக்க நல்ல குழல் புட்டும்... சுடச் சுட நல்ல நெத்தலிக் குளம்பும் வைப்பிச்சுக் கொண்டே அந்த அண்ணாவட்டை குடுத்த பிறகுதான் என்ரை மனம் ஆறிச்சுது. அதுக்குப் பிறகு 'விசாகன்' எண்ட அந்த அண்ணாவுக்கும் எங்கடை குடும்பத்துக்கும் இடையே எந்த ஒரு வேலியும் இல்லாமல் போச்சுது. என்ரை அம்மா விசாகன் அண்ணாவைத் தன்ரை மூத்த மகனாகவே மனதுக்கை தீர்மானிச்சுப் போட்டா!

★

விசாகன் அண்ணாவைப் பற்றிய நினைவுகளில் வட்டமிட்டுக் கொண்டிருந்த எனக்கு நேரம் போனதே தெரியயில்லை. அம்மா ஒருபாட்டம் சுவாமி அறைக்குள்ளை நிண்டு அழு அழெண்டு அழுது போட்டு கண்ணையும் துடைச்சுக் கொண்டு வாறா. என்ரை மடியிலை படுத்துத் தூங்கி விட்ட தங்கைச்சியைக் கொண்டே வளத்துகிறேன். சிவபாலுவைக் கூப்பிடுகிறேன். அவன் சுத்த மோசம். ஒரு அலுவலுக்குப் போனா ஒண்டரை நாள் செல்லும். கொடி கட்ட எண்டு கறுப்புத் துணிக்கு எங்கை திரியிறானோ? நேற்றைய சண்டையின் தொடர்ச்சியாக தூரத்தே வேட்டுச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருக்கின்றன. நல்ல குளிர்ந்த தண்ணியிலை முகத்தைக் கழுவுகிறேன். ஈரமான என்ரை முகத்திலை இதமாக காத்து வந்து விழுகுது. அம்மாவிடம் சந்திப்பக்கம் போறதாகச் சொல்லிவிட்டு வெளிக்கிடுகிறேன். படலையையும் திறந்து கொண்டு சைக்கிளை உருட்டிக் கொண்டு றோட்டில் ஏறும் போது துள்ளிக் குதித்துக் கொண்டு கறுப்புக் கொடி ஒண்டையும் அசைச்சுக்கொண்டு ஓடி வருகிறான்.

''அண்ணா... எங்கடை விசாகன் அண்ணா சாகையில்லை... எங்கடை விசாகன் அண்ணா சாகையில்லை''

பரபரப்பு... மகிழ்ச்சி... அதிர்ச்சி எல்லாமே என்னிலை வந்து அலை மோத. ஒரு நிமிசம் என்ரை நாக்கு எழும்பையில்லை.

''ஓமண்ணை... அதுவேறை விசாகன் அண்ணாவாம்...பொடி இண்டைக்குச் சுன்னாகத்துக்கு வருகுது... எங்கடை விசாகன் அண்ணா சாகையில்லை. எங்கடை விசாகன் அண்ணா சாகையில்லை...''

இந்த இன்பச் சேதியை அம்மாவிடமும் தங்கைச்சியிடமும் தான் முந்தித் தெரிவிக்க வேணுமெண்ட அவாவிலை சிவபாலு ஓடுறான். சந்திப் பக்கமா என்ரை சைக்கிளை நான் வேகமா உழக்கிறேன்.

★

விசாகன் அண்ணாவின்ரை மோட்டைச் சயிக்கிள் சத்தம் எனக்கு அத்துப்படி. வேகமா ஓடையுக்கை அதின்ரை இரைச்சல்... சிலோ பண்ணையுக்கை அதின்ரைவித்தியாசமான இரைச்சல்.. எல்லாமே எனக்குத் தெரிஞ்சவைதான். விசாகன் அண்ணா மோட்டைச் சயிக்கிளைக் கிட்டக் கொண்டு வந்து நிப்பாட்டினார். தலையிலை ஒரு சின்னக் கட்டு. அந்த வெள்ளை நிறத் துணியிலை நெத்திப் பக்கமா ஒரு ரத்தத் திட்டு. பொக்கெற்றுக்கை ஒரு வாக்கி. தோளிலை வார் போட்ட வித்தியாசமான துவக்கு. விசாகன் அண்ணாவைக் கண்டதும் என்ரை சந்தோசம் எல்லையைக் கடந்திட்டுது. ஆனந்தத்திலை தாரை தாரையா கண்ணீர் வழிஞ்சுது.

''அண்ணா... நீங்கதான் செத்ததெண்டு கதை வந்தாப் போலை நாங்க வீட்டிலை எல்லாரும் துடி துடி எண்டு துடிச்சுப் போனோம். அம்மாவின்ரை கண்ணாலை போன கண்ணீர். சரசு கூட சாப்பிட மாட்டேனெண்டிட்டாள்...''

''என்னைத் தெரிஞ்சவையெல்லாரும் நான் தானாக்குமெண்டு...''

அரிசிப் பற்கள் அழகாகச் சிரிக்கின்றன.

''நீங்க சிரிக்கிறியள். ஒவ்வொரு நிமிசமும் நாங்க துடிச்ச துடிப்பு. காயம் ஒண்டும் பெரிசா இல்லையே? இதென்ன நெத்தியிலை...? அம்மாவும் சரசுவும் கண்டினமெண்டா எவ்வளவு சந்தோசப் படுவினை. கையோடை வந்திட்டுப் போறியளே?''

விசாகன் அண்ணாவை வீட்டை கூட்டிக் கொண்டே அம்மாவுக்கும் தங்கைச்சிக்கும் முன்னாலை விட்டுக் காட்ட வேணுமெண்ட அற்ப ஆசை மனதைப் போட்டு அரிக்கிறது. ஆவலுடன் விசாகன் அண்ணாவைப் பார்க்கிறேன்.

''இல்லை கண்ணன்... தாக்குதல்லை வீரமரணம் அடைந்தவர்களுக்கான அஞ்சலி நிகழ்ச்சியை சுன்னாகம் சந்தையிலை ஒழுங்குபண்ண வேணும்... அப்ப சுன்னாகம் சந்தைக்குநீர்போகையில்லையோ ?''

''இனி அங்கை ஏன் போகவேணும்? உங்களைக் கண்டாச்சு... நீங்க சாகையில்லை எண்டு தெரிஞ்சாச்சு.. அந்தளவும் எனக்குப் போதும்...

''என்ன மடத்தனமான கருத்தை நீர் வைச்சுக்கிறீர் ஐசே...''

விசாகன் அண்ணாவுக்கு இப்படி விறு விறு எண்டு கோபம் வந்ததை ஒரு நாளும் நான் காணையில்லை.

''தாக்குதல்லை நான் செத்துப் போயிட்டேன் எண்டு நினைச்சு அழுதியள். ஆனால் அதே தாக்குதல்லை தன்ரை ரத்தத்தை இந்த மண்ணுக்குத் தந்துவிட்டுப் போனானே ஒரு போராளி... அந்த முகம் தெரியாத போராளிக்காண்டி கண்ணீர் விட வேண்டாம்.. தலையைச் சாய்த்து ஒரு கடைசி மரியாதையையாவது செலுத்தக் கூடத் தயங்கிறியள்... என்ன உணர்வற்ற மனிசர் நீங்கள்...?

விசாகன் அண்ணாவின்ரை துவக்குக்காலை வாற குண்டுகளிலும் பாக்க வேகமாக வந்து என்ரை நெஞ்சைத் துளைக்கிறது அவற்றை ஒவ்வொரு சொல்லுகளும்.

''இவ்வளவு காலமா நீங்கள் என்னிலை வைச்சிருந்த அன்பையும் பாசத்தையும் தனிபபட்ட 'விசாகன்' எண்ட என்னிலை வைச்சிருந்ததா நான் கருதையில்லை. எங்கடை போராட்டத்திற்கு வழங்கினதாகததான் நான் கருதினேன்... உணர்வோடை இயங்கிறியள் எண்டு நான் பெருமைப்பட்டேன். ஆனால்... உங்களட்டை இருக்கிறதெல்லாம் வெறும் அர்த்தமற்ற அநுதாபங்கள் தான்!

(6ஆம் பக்கம் பார்க்க)

விற்பனைக்கு

## கண்ணாடி சோக்கேஸ் (அலுமாரிகள்)

நல்ல நிலையில் உள்ள மூன்று கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. கடமை நேரத்தில் வந்து பார்வையிடலாம். அரக்கு முத்திரை இட்ட கூறு விலைகள் 25. 07. 93 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

அகில இலங்கை பரஸ்பர சகாய நிதிச்சங்கம்,
தபாற்கந்தோரடி, வட்டுக்கோட்டை.
(5312)

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தின் கைத்தொழில் மேம்பாட்டிற்காக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகளை ஒன்றிணைக்கும் முகமாக ''தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்'' உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே தற்பொழுது முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள், தொடர்ச்சியாக இயங்கி தற்கால சூழ்நிலையால் இயங்காதிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் கைத்தொழில் நிறுவனங்கள் யாவும் தம்மை இந்நிறுவனத்தில் தவறாது பதிவு செய்யும்படி வேண்டப்படுகின்றனர்.

மேலதிக விபரங்கட்கு இல. 230, இராமநாதன் வீதி (பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) யில் அமைந்துள்ள தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனம்

[சி/6970]

## பதவி வெற்றிடங்கள்

யாழ். மாவட்டத்தில், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள், தகைமை உடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன:

1) முகாமையாளர்கள்.
2) கணக்குப் பதிவாளர்கள்.
3) உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
4) காசாளர்கள்.
5) களஞ்சியப் பொறுப்பாளர்கள்.
6) சிட்டை எழுதுநர்கள்.
7) விற்பனையாளர்கள்.

### தகைமைகள்

**1) முகாமையாளர்கள்:**

க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியும், 2 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

4 வருட காலம் வர்த்தக முகாமையாளராகக் கடமை புரிந்த அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**2) கணக்குப் பதிவாளர்கள்**

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியலிலும், வர்த்தகமும், நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட கணக்கியல் தராதரப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கணக்குப் பதிவாளராக ஆகக் குறைந்தது 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**3) உள்ளக கணக்காய்வாளர்கள்**

க. பொ. த. (உ/த) பரீட்சையில் கணக்கியல், வர்த்தகமும் நிதியும் ஆகிய பாடங்களில் சித்தியும் 2 வருடத்திற்குக் குறையாத கணக்காய்வு அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

ஏதாவது ஒரு கற்கைநெறியில் கணக்காய்வில் சித்தியுடன் 1 வருட கணக்காய்வு அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

கணக்காய்வுத் துறையில் 3 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**4), 5), 6), 7) ஆகிய பதவிகளுக்கு**

ஆகக்குறைந்தது க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியும், குறிப்பிடப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 1 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

குறிப்பிடப்பட்ட துறையில் 3 வருடத்திற்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அனுபவத்தையும், வேலைத்திறனையும் அடிப்படையாகக் கொண்டு சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு நாள் 15-07-1993.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி -
ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம். (இ)

## அர்த்தமற்ற

அவர் சொல்லிறதெல்லாம் சரியான உண்மையள்தான். சற்று முன்சினத்து வெடித்த அவரது முகம் இப்போது கனிவைக் கொண்டு வருகிறது.

''கண்ணன்! ஒரு போராளியிலை ஆசை வைச்சோ அல்லது அநுதாபம் வைச்சோ அவனை நேசிக்க வேண்டாம். அது அவனைப் பின்னடையச் செய்யும். அவன்ரை உணர்வு பூர்வமான தாகத்தை உணர்ந்து உங்கள் அன்பையும் ஆதரவையும் கொடுங்கோ... அநுதாபங்கள் எல்லாம் உணர்வு பூர்வமா அமையட்டும்...''

மோட்டச்சயிக்கிள் புகையைக் கக்கிக்கொண்டு பறக்கிறது.

தெளிவான மனத்துடன் வீட்டுக்கு வருகிறேன். விசாகன் அண்ணாவுக்காகத் தைக்கப்பட்ட கறுப்புக்கொடி மூலையில் கிடக்கிறது அமைதியாக அதனை எடுக்கிறேன். உயரத்தில் கட்டுகிறேன்.

''இனி ஏனண்ணா இந்தக் கறுப்புக்கொடி?''

சிவபாலு என்னைக் கேட்கிறான்.

''இறந்த எல்லா அண்ணாக்களுக்குமாக!'' அமைதியாகச் சொல்லிக்கொண்டு சைக்கிளில் ஏறி சுன்னாகச் சந்தைப் பக்கமாக உழக்குகிறேன்.

## அமெரிக்க

ஹிச்சி ஒகாபே என்பவர் தனது நாட்குறிப்பில் கடைசியாக எழுதி வைத்தவை இப்படியாக அமைகிறது:

22, பெப்ரவரி 1945.

நான் உண்மையில் கடைசியாகச் செல்லும் கமிகாசி தற்கொலைப்படைவீரன். எமக்கு பயிற்சி கடுமையானது. ஆனால், ஒரு குறிக்கோளிற்காக மரணிப்பதால் மகிழ்ச்சியடைகிறேன். நான் பெரும் ஞானியோ, முரடனோ இல்லை வீரனோ முட்டாளோ அல்ல - ஒரு மனிதப் பிறவிதான். எனது வாழ்வு ஒரு வரலாறாகும் என்று நம்புகிறேன். என் நாட்டிற்கும் மக்களிற்குமாக மரத்திலிருந்து உதிரும் மலர்போன்று வானில் இருந்து எதிரியின் கப்பல் மீது விழப்போகிறேன் - எதிரியை அழித்து விடுவதற்காக. இன்றைய கடமை என்ன? போராடுவது. நாளைய கடமை? வெற்றி பெறுவது. அதற்காகஅன்றாடக்கடமை? மரணிப்பது - ஒகாபே

★ ★

ஜப்பானிய போர்வீரர்களின் இததகைய உறுதி மிக்க தீரமும் உயிரைப் பொருட்படுத்தது எதிரி மீது நடத்திய தற்கொலைத் தாக்குதலும் அமெரிக்காவை மட்டுமல்ல முழு உலகையும் அன்று வியப்பில் ஆழ்த்தியது... அந்த வியப்பு இன்றும் மறைந்துவிடவில்லை. அது இன்று வேறு ஒரு பரிமாணத்தைப் பெற்று இந்த மண்ணில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது.

## தேவை

தமிழாக்கம் செய்யப்பட்ட பொது,விஞ்ஞான அறிவியல் விடயங்களையும், வீடியோ திரைப்படங்களையும் ஒப்பிட்டு சரிபார்க்க வேண்டும். ஆங்கில, தமிழ்மொழி ஆற்றல் உள்ள ஆண்கள் விண்ணப்பிக்கவும். பாடசாலை, பல்கலைக்கழககல்வி முடித்தோர்விரும்பத்தக்கது.

15 - 07 - 93 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 194,
c/o ஈழநாதம்
31, மகேந்திரா வீதி. யாழ்ப்பாணம். [5297]

## பதவி வெற்றிடம்

பதவி: கணக்காளர்- 104/08

சம்பளத்திட்டம்: 1005_1705
40 x 5=50X10

(அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 23-45 வருடங்கள்

**கல்வி மற்றும் தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தின் கணக்குப்பதிவாளர்/கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10ஆவது சம்பளத்திட்டத்தின் கணக்குப்பதிவாளர்/கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் அல்லது கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்டத்தில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராய்ச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலை பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்காய்வு துறையிலான மேற்பார்வை மட்ட பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,

அல்லது

இ. கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம்(உயர்தரம்) க, பொ. த உயர் தரத்தில் கணக்கியல் உட்படமூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

விண்ணப்பங்கள் யாவும் ''தலைவர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்'', என்ற முகவரிக்கு 22-7-93 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப நோ. கூ. சங்கம்.
(சி/6973) யாழ்ப்பாணம்.

## கவிஞர்களே!

தமிழ்த் தேசிய இன ஒடுக்குமுறை — விடுதலைப் போராட்டம் பற்றிய கவிதைத் தொகுப்பொன்றில் சேர்க்கப்படக்கூடிய கவிதைகளை எதிர்பார்க்கின்றோம்.

★ 1986 தை மாதத்திலிருந்து எழுதப்பட்டு பிரசுரிக்கப்பட்ட / பிரசுரிக்கப்படாத இரண்டு கவிதைகளை அனுப்பிவையுங்கள்.

★ முடிவு திகதி: 31-07-1993

முகவரி: தமிழ்த்தாய் பதிப்பகம்,
664, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். [சி-6979]

அளவெட்டி விநாயகர் விளையாட்டு கழகம் 4-7-93-ல் நடாத்திய

## மாட்டுவண்டி சவாரியில் வெற்றி பெற்றோர் விபரம்

| | A பிரிவு | B பிரிவு | C பிரிவு |
|---|---|---|---|
| 1ஆம் இடம் | மதுசன் சண்டிலிப்பாய் | மதிசுதன் சங்குவேலி | க. செல்வரத்தினம் மானிப்பாய் |
| 2ஆம் இடம் | ச. பிரதீபன் சங்குவேலி | சி. மகேந்திரன் அளவெட்டி | சிதம்பரப்பிள்ளை வட்டுக்கோட்டை |
| 3ஆம் இடம் | ம. பிரதீபன் சுன்னாகம் | க. சிவஞானம் அளவெட்டி | க. வரதராசா வட்டுக்கோட்டை |
| 4ஆம் இடம் | க. விஷ்ணுகரன் வரணி | சின்னத்தம்பிசெட்டி சங்குவேலி | பிரேமகுமார் அளவெட்டி |

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களையும், பங்குபற்றியவர்களையும் வாழ்த்தி ஒத்துழைப்பு வழங்கியவர்கள், உதவி செய்தவர்கள். ரசிகர்கள் அனைவருக்கும் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் நன்றி கூறுகின்றது.

விநாயகர் விளையாட்டுக் கழகம்
அளவெட்டி

[சி-6978]

# அமெரிக்க கடற்படையை கிலிகொள்ள வைத்த ஜப்பானின் 'கமிகாசி' தற்கொலைப்படை வீரர்

**1944** ஆம் ஆண்டின் நடுப்பகுதி. பசுபிக் கடற்பகுதியில் ஜப்பானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையில் தரையிலும், கடலிலும், வானிலும் கடும் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த இரண்டாம் உலகப் போர்க்காலம். பசுபிக் பிராந்தியத்தில் பிலிப்பைன்ஸ்ஸை மையமாகக் கொண்டு அமெரிக்கக் கடற்படை பலமிக்கதாக இருந்த நேரம். ஜப்பானிய கட்டுப்பாட்டின் கீழ் பசுபிக் கடற்பகுதியில் இருந்த பல தீவுகள் அமெரிக்காவின் கடற்படையின் ஆதிக்கத்தினுள் வீழ்ந்து கொண்டிருந்தன.

பசுபிக் கடலில் வெற்றி இறுமாப்புடன் நிற்கின்றது ஓர் அமெரிக்கக் கடற்படையின் போர்க்கப்பல். திடீரென வானத்தில் தோன்றிய விமானம் ஒன்று கப்பலை நோக்கி விரைந்து வருகிறது நேராக கப்பலின் மேல் தளத்தை நோக்கி குத்திப் பதிந்தது. அந்த விமானம் கப்பலை மோதியதும் எழுந்த பேரிடி பசுபிக் கடற்பிராந்தியம் எங்கும் ஒலித்து ஓய்ந்தது. சில விநாடிகளுக்கு முன் அங்கு நின்று கொண்டிருந்த அந்த அமெரிக்கப் போர்க் கப்பல் இரண்டாகப் பிளந்து நீரில் மூழ்கிக் கொண்டிருந்தது. இச்செய்தி அமெரிக்க அதிகாரிகளுக்கு எட்டியபோது அவர்கள் குழம்பிப் போயினர். வந்துமோதிய அந்த விமானம் ஜப்பானிய விமானப் படையின் விமானம் என்பது மட்டும் அவர்களுக்கு தெரிந்தது. ஆனால், எதற்காக விமானம் தமது கப்பல் மீது வந்து மோதியது என்பது குறித்து அறிய முடியாது அமெரிக்க அதிகாரிகள் திகைத்தனர். அவர்களின் இந்த திகைப்பு நீண்ட காலத்திற்கு நீடிக்கவில்லை. தொடர்ந்து ஜப்பானியவிமானப்படை விமானங்கள் அமெரிக்கக் கப்பல்களில் வந்து வீழ்ந்து கப்பல்களை அழித்து அமெரிக்காவின் கடற்படையைக் கலக்கியடித்தவண்ணம் இருந்தது.

## "கமிகாசி" தற்கொலைத் தாக்குதல்

இந்த விமானங்கள் ஏன் வந்து அமெரிக்கக் கப்பல்கள் மீது வீழ்ந்து அவற்றைச் சேதமாக்குகின்றன? இந்த விமானங்களைச் செலுத்தி வருபவர்கள் யார்? என்ற கேள்விகள் எழலாம். இவ்வாறு அமெரிக்க போர்க் கப்பல்கள் மீது தமது விமானங்களை மோதி தாமும் மரணித்து எதிரியின் கப்பலையும் சேதமாக்கிய இந்த விமானிகள் ஜப்பானின் தற்கொலைப் படைவீரர்கள்! 'கமிகாசி' (Kamikaze) என்று அழைக்கப்படும் இந்தத் தற்கொலைப்படை வீரர்கள் தமது விமானத்தில் வெடிமருந்துகளை நிரப்பி கொண்டு அந்த விமானங்களை தாமே செலுத்தி வந்து அமெரிக்கக் கப்பல்கள் மீது மோதி அவற்றை நாசமாக்கியதுடன் தாமும் உயிர் துறந்தனர்.

பசுபிக் கடற்பகுதியில் அமெரிக்க கடற்படையின் வல்லாதிக்கம் அதிகரித்ததையடுத்து அவ்வாதிக்கத்தை தகர்ப்பதற்காக ஜப்பானிய படை அதிகாரிகள் அமெரிக்க போர்க்கப்பல்களை குறிதவறாது அழிக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்தனர்.

இவ்வேளையிலேயே பல ஜப்பான் விமானப்படை வீரர்கள் தாமாக முன்வந்து அமெரிக்க போர்க்கப்பல்கள் மீது தற்கொலைத் தாக்குதலை நடத்த தயார் என அறிவித்தனர்.

இத்தாக்குதலுக்கு பயன்படுத்தும் விமானம் முழுவதுமாக வெடிமருந்து நிரப்பப்பட்டு அது ஒரு பறக்கும் வெடிகுண்டாகவே மாற்றப்படும். தற்கொலைத் தாக்குதல் வீரன் அவ்விமானத்தை செலுத்தி வந்து இலக்குமீதுதாக்கிதனது விமானத்துடன் இலக்கையும் அழித்து விடுவதே இந்த 'கமிகாசி' எனும் தற்கொலைத் தாக்குதலாகும்.

## தாக்குதல் நடத்தப்படும் முறைகள்:

இது இரண்டு முறையில் நடத்தப்பட்டது முதலாவது முறை உயரத்திலிருந்து திடீரென இலக்குமீது வீழ்வது. இதில் வெடிகுண்டாக பறந்து வரும் விமானம் 6000 முதல் 7000 மீற்றர் உயரத்தில் பறந்து தனது இலக்கான போர்க் கப்பலைக் கண்டதும் விமானி விமானத்தை திடீரென உயரத்தை 1000மீற்றருக்கு பதித்து இலக்கைத் தாக்கும் இரண்டாவதுமுறை விமானத்தை கடல் மட்டத்துடன் செலுத்தி வந்து இலக்கை நெருங்கியதும் விமானத்தை 400 மீற்றருக்கு திடீரென மேல்கிளப்பி இலக்குமீது வந்து வீழ்வதாகும். இச்சந்தர்ப்பங்களில் சிலசமயம்விமானம் இலக்கை அடைய முன்பே எதிரியினால் சுட்டு வீழ்த்தப்படுவதுமுண்டு.

இவ்வாறான தற்கொலைத் தாக்குதல்களால் ஒருவருடத்தில் அமெரிக்க கடற்படையின் 37 கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன என்றும், 59 கப்பல்கள் சேதமாக்கப்பட்டன என்றும் அமெரிக்க கடற்படையின் அறிக்கைகள் ஒப்புக்கொண்டன.

## தற்கொலை வீரர்களின் இறுதிக் கடிதங்கள்:

தமது முறை வரும் வரை காத்திருந்து தமது முறை வந்ததும் வெடிமருந்துகளால் நிரப்பப்பட்ட விமானத்தைசெலுத்திச்சென்று எதிரியின் இலக்கையும் அழித்து தன்னையும் அழித்துக் கொண்ட இந்த ஜப்பானிய வீரர்களின் மனநிலை என்ன? இவர்கள் தமது கடைசிப் பயணத்தை ஆரம்பிக்க முன்னர் தமது பெற்றோர்களுக்கு எழுதிய கடிதங்கள் சில வெளிவந்துள்ளன. இகாரோ ஒகாமி என்ற ஜப்பானியர் ஒருவர் ஜப்பானில் நாலரை வருடங்கள் சுற்றுப்பயணம்செய்து இந்த கமிகாசி தற்கொலை வீரர்களின் வீடுகளுக்குசென்று இந்த கடிதங்களை சேகரித்து அவ்வீரர்களின் மனநிலை குறித்து வெளியுலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார். அவற்றில் சில இங்கு தரப்படுகின்றன.

இவற்றில் சுசுமு கயிற்ஜிசு என்ற தற்கொலைப்படை வீரன் எழுதிய இறுதிக்கடிதம் இவ்வாறு அமைகின்றது:

அன்பின் பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும், இந்த இலையுதிர்காலம் உங்கள் எல்லோருக்கும் நல்ல ஆரோக்கியத்தை தரும் என்று நம்புகின்றேன்.

நான் இப்போது அமைதியாக இருக்கிறேன். எனது ஒரே நோக்கம் எதிரியின் கப்பலை மூழ்கடிப்பதே. என்னைப் போன்றே எனது சகாக்களான மியாசாகி, தனாகா கிமுரா ஆகியோரும் இந்நோக்கத்தையே கொண்டிருக்கின்றனர். நாம் கடிதங்களை எழுதியும், சீட்டு விளையாடியும், வாசிப்பதிலும் இப்போது பொழுதை கழிக்கின்றோம்.

எனது தோழர்கள் ஜப்பானை வெற்றிப்பாதையில் கொண்டு செல்வார்கள் என்ற பூரண நம்பிக்கையுடன் நாம் எமது பணியை பூர்த்திசெய்ய கிளம்புகின்றோம். எனது வெற்றிச் செய்தியை எதிர்பார்த்து கலங்காமல் காத்திருங்கள். எனது குடும்பத்திற்கு நல்லாசிகள் கூறி இக்கடிதத்தை முடிக்கிறேன்.

★ ★

இதே போன்று தற்கொலை தாக்குதல் வீரரான இசாவோ மற்சுவோ என்பவர் தற்கொலைத் தாக்குதலை நடத்த புறப்படுவதற்கு சிறிது நேரத்தின் முன் எழுதிய கடிதம் இவ்வாறு அமைகிறது:

28, ஒக்டோபர் 1944

அன்பின் பெற்றோருக்கு,

நாட்டிற்கு மரணிப்பதற்கு எனக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. தயவுசெய்து என்னை வாழ்த்துங்கள். இன்றுதான் எனது கடைசி நாள். நாட்டிற்காக இன்று இறக்கும் நான் அடுத்த ஏழு பிறவி எடுத்தாலும் எதிரியை அழித்து மரணிப்பதையே விரும்புகிறேன் உங்களைப் போலவே எனது அதிகாரியும் என்னை சொந்த மகன்போல் பேணி எனக்குபயிற்சிதந்தார் நான் இந்த நாட்டிற்காகவே மரணிக்கிறேன் என்பதை நீங்கள் எண்ணிப்பாருங்கள். இதுவே எனது இறுதி விருப்பம். இதைவிட எனக்கு வேறு எதுவும் இல்லை.

எமது குறிக்கோள் எதிரியை விமானம் மூலம் சென்று அழிப்பதே நாம் எதிரியை தாக்கி அழித்து மரணிப்பதை படப்பிடிப்பார்கள். சில சமயம் நீங்கள் அப்படங்களை பார்க்க நேரிடலாம். இதை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது எனது நண்பன் நான் பறக்கவுள்ள விமானத்திற்கு எரிபொருள் நிரப்பிக் கொண்டிருக்கிறான். இங்கு சோகம் என்ற நிலையே இல்லை. எல்லோரும் அமைதியாக-ஆனால் உறுதியாகவுள்ளோம்.

எனது தம்பியை நன்றாக கற்பியுங்கள். சகோதரியையும் கவனித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் அவளும் உங்களைப் போலவே ஒரு வீரனை இந்நாட்டிற்காக பெற்றுத்தருவாள். உங்கள் அனைவரையிட்டும் பெருமையடைகிறேன்.

- இசாவோ

**துஷ்யந்தன்**

(6ஆம் பக்கம் பார்க்க)

## விழுதுகளல்ல வேர்கள்!

வார்த்தைகளால்
வார்த்துவிட முடியாத
மெழுகுவர்த்திகள்! - இவர்
ஒழிந்து நின்றே
ஒளியேற்றி வழிகாட்டும்
தொடரான சுடர்கள்!

நிஜத்தைக் காட்டவும்
நியாயத்தை ஊட்டவும்
நிர்மூலமானவர்கள்!
நினைத்துப் பார்க்கும்
நினைவுகளில் மட்டுமே
இவர்
நிழற்படங்கள்!

உதயத்தை எட்டவே
உணர்வினால் வாட்டவே
உருக்குலைந்தவர்கள்
உயிரகன்ற உடனேயே
கருத்தறிந்தகருவறைகளில்
கருத்தரிக்கும் இவர்
உடல்கள்!

எல்லைகள் கடந்து
தொல்லைகள்தந்தோர்க்கு
மில்லர்கள் - இவர்...
வாழ்க்கையின் படிகளை
சொல்லினால் வடித்த
வள்ளுவனே கண்டிராத
வள்ளல்கள்

தாயகம் நோக்கிய இவர்
பயணத்தில் ஓயாத
புயலும்
பணிந்துபோகும்!
வஞ்சகத்தின் பாதையில்
வரும்பகை
வெஞ்சின வேங்கையின்
கையால் வேகும்!

வள்ளுவன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக

வெளிவாரிப்

பட்டப் படிப்புகள்

1993 AUG - மீட்டல்; வினா-விடை வகுப்பு

பொருளியல்

S. வரதராஜன் B.A(Hons)

1st in ARTS | B.A
1st in COM | B.COM PART 1

❋ பொருளியற் தத்துவங்கள்

❋ இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு

ஆரம்பம்: 10-07-93
சனி பிற்பகல் 5.15

❋ MICRO ECONOMICS

❋ MACRO ECOnOMICS

ஆரம்பம்: 11-07-93
ஞாயிறு பிற்பகல் 3.30

★ அச்சிடப்பட்ட வினா விடைக் குறிப்புகள் வழங்கப்படும்.

★ முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து வினா விடைக் குறிப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும்.

பாரதிதாசன்

கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். (சி-6964)

நல்லூர் அருள்மிகு ஸ்ரீ மூத்தவிநாயகர்

தேவஸ்தானம்

மண்டலாபிஷேக

பூர்த்தி விழா

09-07-93 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணி [1008] மஹா சங்காபிஷேகம், 1008 மோதகம், 1008 விளக்குகள்கொண்டு விநாயகர் ஆராதனை

இரவு 8.00 மணிக்கு

பாராட்டு விழா

மஹா கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்திய எமது தேவஸ்தான பிரதம குரு

சிவஸ்ரீ கயிலை வாமதேவ குருக்களையும்,

பிரம்மஸ்ரீ இ. கமலநாத சர்மாவையும்,

பஞ்சமுக விநாயகரை அழகுற அமைத்துத் தந்த

சிற்பக் கலாநிதி சின்னராசா ஸ்தபதி அவர்களையும்

கௌரவித்துப் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளன.

— மூத்த விநாயகர் தேவஸ்தானம்

[5316]

# பற்றீஷன்

## தொழிற் பயிற்சி நிறுவனங்கள்

## PATRICIAN INSTITUTES

1. Diploma in Computer Studies
2. Computer Process ng Courses
   (i) Basic (ii) Word Processing
   (iii) dBase III Plus
   (iv) Lotus 1—2—3

மேற்படி பயிற்சி நெறிகள் 17-07-1993 (சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

(3) Civil Draughtsmanship and Quantity Surveying
(4) City and Guilds of London Examinations year 1994
  (a) Quantity Surveying
  (b) Electrical Electronic Engineering Technician (Part I, II, & III)
(5) Special English Classes
(6) TOEFL
(7) Shorthand and Typing (English)
(8) Motor Mechanism
(9) Motor Winding
(10) Electrical Wiring
(11) General Electrician.

★ மேற்படி பாடநெறிகளும் 14-07-1993 (புதன் கிழமை) ஆரம்பமாகும்.
★ அனைத்துப் பாட நெறிகளும் வாரநாட்கள், வாரஇறுதி நாட்கள் வகுப்புக்களாகநடைபெறும்.
★ மேலதிக விபரங்கட்கு,

பதிவாளர்,
பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்,
இல. 59, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Registrar,
Patrician Institutes
No. 59, St. Patricks Road,
JAFFNA.

(சி-6977)


# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
02. 11. 1972

வீரச்சாவு:
09. 07. 1992

## வீரவேங்கை இளங்கோ

[செல்லத்தம்பி பாலச்சந்திரன்]
(சொருவில், மன்னம்பிட்டி, பொலநறுவை)

சிங்களவர் சூழ்ந்து
சிறையில் வைத்தது போல
எங்களது மன்னம்பிட்டியில்
தம்பி!
பாலு, நீயும்
தாயகக் கனவுடன் நடந்தாய்
சிங்கள கொடுமை தீர
எங்களது மண்ணில்
சுதந்திரம் வேண்டினோம், போரிட்டோம்
உன் வீரத்தை
காட்டு மரங்களும் சாட்சி சொல்லும் - நீ
காவிய துப்பாக்கி மறக்காது
எம் விடுதலையில் இளங்கோ - உன்
பெயர் என்றென்றும் நிலைக்கும்

அண்ணன்
பவான் [L.K]

[5315]

### மண்டலாபிஷேக பூர்த்திவிழா

நல்லூர் அருள்மிகு ஸ்ரீமூத்த விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேக மண்டலாபிஷேக பூர்த்திவிழா இன்று காலை எட்டு மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இன்று விசேட அபிஷேக பூசைகளும் பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளது.

## கலைமுகம்

'ஓர் இனிய மாலைப் பொழுதினில் பல்கலை வேந்தன்' என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலா மன்றம் எடுத்த நாட்டுக் கூத்து விழாவைப் பற்றி பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசனுடன் ஒரு நேர்காணல் நடத்தப்பட்டு, அதுகலைமுகத்தில் ஒன்றரைப் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது (ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது) கால் நூற்றாண்டுக்கு மேல் யாழ்ப்பாணப் பக்கம் மறந்து போய்த்தானும் தலைவைத்துப் படுக்காமல் கொழும்பில்வாழும் 'துரதிர்ஷ்டங்களில்' சில்லையூர் செல்வராசனும் ஒன்று. கொழும்புக் காரரானசில்லையூரிடம்போய் அவர் பார்த்து அனுபவியாத நாட்டுக் கூத்து விழாவைப் பற்றி அலட்டிக்கொளவதுஅப் துல்காதருக்கும் அமாவாசைக்கும சம்பந்தம் காண்பது போன்றதாகும்.

மற்றும்படி வானொலி நாடகங்கள் பற்றி சிறிலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் நாடகக் கட்டுப்பாட்டாளராகப் பணியாற்றும் மதியழகனை நேர் காணப்பட்டிருப்பது கொக்கிற்குத் தட்டில் பால் வார்த்த கதை போல் உள்ளது. யாழ்ப்பாணத்துக்கும், சிறிலங்கா வானொலிக்கும் என்ன சம்பந்தம் என்பதிலும் தலைகால் புரியவில்லை. இந்த நேர்காணலைத் தயாரித்து அளித்தவர், மின்சாரம் மற்றும் மின்கலம் இல்லாமல் வானொலியில் அலை வரிசை அதிர்வுகளை உள்வாங்க முடியாது இருக்கும் நம்மவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் வானொலியில் ''பஜனை'' செய்யும் மதியழகனின் பேட்டியினால் கூத்துக் கலைஞர்களுக்கும், ஏனையோர்களுக்கும் என்ன பயன் என்பதை உணர ஏனோ தவறி விட்டார்.

**ஒரு குறிப்பு:**

நெருடபு என்று கடதாசியில் எழுதுவதன் மூலம் கடதாசி எரிந்து விடாது. அதுபோல் கூத்தைப் பற்றி எழுதுவதன் மூலம் கூத்து வளர்ந்து விடாது. கூத்தின் பௌதிக எல்லைகளைச்சுருக்கி ஆடுவதன் மூலமும், பாடுவதன் மூலமும் கூத்தினை நவீனப் படுத்தி விட முடியாது என்பதினை நாட்டுக்கூத்து விழா எடுப்பவர் கருத்தில் கொள்ள வேண்டும். முழுச் சமூகமுமே ஒத்திசைவாக இயங்கும்போதுதான் கலை பிறக்கிறது. கூத்தின் அன்றைய சமூகப் பயன்பாடு வேறு இன்றையதேவை வேறு. இந்த முக்கியமான சமூக ஒத்திசைவு இந்தக்காலத்தேவைக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்பதில்தான் கூத்தின் வளர்ச்சி தங்கியுள்ளது ஐரிஸ் நாடக அரங்கு பெரும்பாலும் ஐரிஸ் விடுதலை இயக்கத்தின் வஸ்தரிப்புத்தான்.

இந்தச் சமயத்தில் நாட்டுக் கூத்துவிழா அரங்கில் மேடைப் படுத்தப்பட்ட கூத்துக்களையும் சேர்த்தே கலைமுகத்தை மதிப்பிட வேண்டியுள்ளது. கலைமுகத்தில் தென்மோடி, ஆட்டக்கூத்து, மன்னார்ப் பாங்கு, முல்லைத்தீவுப் பாங்கு பற்றிக் குறிப்பு எழுதியவர்கள் தமது கூத்துக்களையும் நவீனப்படுத்தல் என்ற பெயரில் குறுகத்தறித்து மேடைப் படுத்தியுள்ளார்கள் அவர்கள் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடுவதை விட்டு நாட்டுக் கூத்தை நவீனப்படுத்தி சமுதாயச் சூழலுக்குப் பொருத்தமானதை மேடைப் படுத்த வேண்டும். இது விரிவாக ஆராயப்பட வேண்டிய விஷயம்.


Jaffna College
Institute of Technology,
Vaddukoddai

# VACANCY

*POST OF DIRECTOR*

A Vacancy exists for a suitable person to head the Institute.

**Qualification:** Recognised Engineering Degree and membership of a recognised professional institute and experience in teaching and / or industry.

**Salary Scale:** Rs. 7. 500/- — Rs. 12. 000/- 10 X 450

Selected candidate will be placed on a point commensurate with qualification and experience.

The selected candidate should reside in the JCIT premises.

**Closing Date:** 30 July 1993

Application should reach either to

The Secretary,
JCIT,
Vaddukoddai
OR
The Pastor,
17, Francis Road,
Colombo - 6

(சி-6924) SECRETARY


# 1-ம் ஆண்டு நினைவலைகள்



## லெப். வீமா

[ரவீந்திராதேவி தங்கராசா]

பிறப்பு:
29-09 1973

வீரச்சாவு:
09-07-1992

சத்தியத்தின் சுடரொளியே – வீமா!
சரித்திரத்தின் காவியமே
பாசத்தின் தீபத்தை நீ
மண்ணிற்காய் கொடுத்தாயே
மோசத்தை எதிர்த்து
கொதித் தெழுந்த சோதரியே - உன்
பிரிவால்
நேசமுள்ள சோதரர் இன்று
நிலை தடுமாறுகின்றோம்.

– நண்பர்கள்

(5315)

# அ.தி.மு.கவுடன் மீண்டும் நட்புறவு; பிரதமர் நரசிம்மராவ் முயற்சி?

இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கம் ''நித்திய கண்டம், பூரண ஆயுசு'' என்ற ரீதியில் ஆட்சி நடத்திச் செல்கின்றது. பிரதமர் நரசிம்மராவிற்கு எந்த மூலையில் இருந்து, எப்பொழுது எந்த வகையான நெருககடி வரும் என்று கூறிவிட முடியாது.. அது ஆளும் கட்சிக்குள் இருந்தும், எதிர்க்கட்சிக்குள் இருந்தும், தனிப்பட்ட நபர்களிடம் இருந்தும்கூட வரலாம். ஆனால் ராவ் யாவற்றையும் ஒரேவகையிலேயே கையாண்டு தனது ஆட்சியை தக்க வைத்துக் கொண்டு வருகின்றார்.

இந்த வகையில் பிரதமர் நரசிம்மராவிற்கு இறுதியாக ஏற்பட்டுள்ள நெருக்கடியானது பங்கு மார்க்கட்டில்சுமார் 3,500 கோடி ரூபா மோசடி புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஹர்ஷத் மேத்தா பிரதமர் நரசிம்மராவிற்கு ஒரு கோடி ரூபா அன்பளிப்பாக கொடுத்ததாக எழுந்துள்ள குற்றச்சாட்டாகும். ஹர்ஷத் மேத்தாவின் இப் பகிரங்க குற்றச்சாட்டானது, பிரதமர் நரசிமமராவிற்கு பெரும் தலையிடியையும், அதேவேளை, எதிர்க்கட்சிகளுக்கு அரசின் மீதான நிர்ப்பந்தத்தைத் திணிக்க ஒரு வாய்ப்பையும் கொடுத்தது.

இந் நிலையில் ஹர்ஷத் மேத்தா விவகாரத்தில் இருந்து 'வெற்றிகரமாக' மீளும் வரை பிரதமர் நரசிம்மராவிற்கு ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம் எழுந்துள்ளது. ஹர்ஷத் மேத்தாவின் குற்றச்சாட்டு வெளிவந்ததும் காங்கிரஸ் கட்சிக்குள் ராவின் பிரதமவைரியும், மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சருமான அர்ஜுன்சிங்கும், பிரதமர் பதவியில் கண்வைத்துள்ள மற்றொருவரான முன்னாள்பாதுகாப்பு அமைச்சரும், தற்போதைய மகாராஷ்டிர முதலமைச்சருமான சரத்பாவர் உட்பட அனைவரும் பிரதமர் நரசிம்மராவ் மீது நம்பிக்கை வெளியிட்டிருந்தனர்.

ஆனால், எதிர்க்கட்சிகள் யாவும், இவ்விடத்தில் பிரதமர் நரசிம்மராவ் தமது நேர்மையை நிரூபிக்க வேண்டும் எனக் கோரினர். இதில், பாராளுமன்றத்தில் இந்திரா காங்கிரஸிற்கு ஆதரவு கொடுத்து வந்த அஜிதசிங் தலைமையிலான ஜனதா தளமும் குறிப்பிடத்தக்கதாகும். 20 பாராளுமன்ற தொகுதி உறுப்பினர்களைக்கொண்ட இக் குழுவின் தலைவரான அஜித்சிங் பிரதமர் பணம் பெறவில்லை என்பதை நிரூபித்தாலேயே பாராளுமன்றத்தில் ஆதரவு அளிக்கபபடும் எனத் திட்டவட்டமாகத்தெரிவித்தார். ஆனால் இவ் விடயத்தில் தமிழகத்தில் ஆட்சியிலுள்ள அ.தி.மு.க. எதுவிதமான அபிப்பிராயத்தையும் வெளியிடாது மௌனமாகவே இருந்துவிட்டது.

அஜித்சிங் குழுவினரின் இம் மிரட்டலானது காரியசாத்தியப்பாடு ஆகுமாயின் ராவின் சிறுபான்மை அரசாங்கம் கவிழ்ககப்படுவது தவிர்க்க முடியாததாகும். இன்றுள்ள இந்தியப் பாராளுமன்றத்தில் 251 ஆசனங்களை மட்டுமே இந்திரா காங்கிரஸ் கொண்டுள்ளது மேலும் உதிரிகளாக ஒரு 10ஆசனங்கள் கிட்டுமாயினும் அறுதிப் பெரும்பான்மையான 261 ஆசனங்களைப் பெறுவது கடினமாகும். இந் நிலையில்தான் மீண்டும் தனது அரசை தக்கவைக்கும் தீவிர முயற்சியில் நரசிம்மராவ் ஈடுபடவேண்டி ஏற்பட்டுள்ளது.

## ராவின் சதுரங்கம்

பிரதமர்நரசிம்மராவ் கடந்த காலத்தில், பல்வேறு வகையில் தனது அரசியல் காய்களை நகர்த்தியுள்ளார். ஒரு வேளையில் சமய சார்பின்மை என்ற ரீதியில் இடதுசாரிகளினதும், ஒரு வேளை, தென்மாநிலத்தவன் என்ற ரீதியிலும், சில வேளைகளில் காங்கிரஸ்காரன் என்ற ரீதியிலும், சில வேளை ராஜீவ் காந்தியின் விசுவாசிகளை அரவணைப்பதன் மூலமும் தனது அரசியற் சதுரங்கங்களை ஆடியுள்ளார். இதுவரை அவரது அரசியல் காய் நகர்த்தல்கள் வெற்றிகரமாகவே இருந்துள்ளன.

எதிரியின் எதிரி எனது நண்பன் என்ற கொள்கையை கட்சிக்குள்ளும், எதிரணியினருடனும் கடைப்பிடிக்கும் நரசிம்மராவ் தனது நண்பனுக்கு விரோதியொருவனை வளர்த்து விடுவதிலும் வல்லவர். இந்த வரிசையில் தான் கட்சிக்குள் தனது முக்கியபோட்டியாளராகிய அர்ஜுன்சிங், சரத்பாவர் போன்றவர்களை தட்டி வைப்பதற்காகஎஸ்.பி.சவான், சுக்ளா போன்றவர்களைவைத்துக் கொள்ளும் ராவ், சவானுடன் தீவிர முரண்பாடு கொண்டவர்களையும் தனக்கு மிக நெருக்கமாக வைத்துள்ளார்.

இவ்வாறான பல்வேறுபட்ட காய் நகர்த்தலின் ஒரு கட்டமாகவே தமிழ்நாட்டின் பக்கம் தனது பார்வையை மீண்டும் திருப்பியுள்ளார். அ.தி.மு.காவின் நிலைப்பாட்டில், கடந்த சில மாதங்களுக்கு முன் இருந்த சூழ்நிலையை விட ஒரு சாதகமானநிலை தமிழக அரசியலில் இருப்பதாகவே அவதானிக்க முடிகின்றது. இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கமே உள்துறை பாதுகாப்பு இணை அமைச்சர் ராஜேஸ் பைலட்டின் தமிழ் நாட்டுவிஜயமாகும். இதன் மூலம் மீண்டும் அ.தி.மு.க. அரசாங்கத்துடனான தனது முயற்சிகளை பிரதமர் நரசிம்மராவ் புதுப்பித்துக் கொள்ள முற்படுவதாகவே கருத இடமுண்டு. இதன் மூலம் தனது சிறுபான்மை அரசாங்கத்தை தக்க வைத்துக் கொள்வதில் ராவ் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது.

உள்துறைப் பாதுகாப்பு இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் அரசின் பிரச்சினைகளைக் களைபவர் என எல்லோராலும் கருதப்படுபவர். ராவின் முக்கிய ஆதரவாளரான ராஜேஸ் பைலட் ராவை போலன்றி இளையவர். விரைவாகச் செயற்படக் கூடியவர். உள்துறை அமைச்சர்களும் சவானின் நிர்வாகத்தால் அதல பாதாளம் நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் ராவினால், உள்துறை அமைச்சிற்கு இணை அமைச்சராக அனுப்பப்பட்டவர். காஷ்மீர் விவகாரம் போன்ற முக்கிய விவகாரங்களில் தலையைப் போட்டுள்ளவர். அதேவேளை உள்துறை அமைச்சர் சவானுக்கு நேர் விரோதமான போக்குடையவர்.

## தமிழகமும் மத்திய அரசும்:

கடந்த மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி இ. காங்கிரசுடன் அ.தி.மு.க. தனது உறவை முறித்ததாக அறிவித்ததோடு 15 வருடங்களுக்கு மேற்பட்ட ஓர் அரசியல்கூட்டு முறிவடைந்தது. ஆனால் இக் கூட்டின் முறிவானது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தனிப்பட்ட தீர்மானத்தின் விளைவு என்றே அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

ஜனவரி மாதத்தில் இருந்து இரு கட்சிக்கும் இடையிலான நிலைமை மோசமடைந்து சென்றாலும், இந்திரா காங்கிரஸ் கட்சி உறவைப் பெரிதும் முறித்துக் கொள்ள விரும்பவில்லை. உறவை நீடிக்க காங்கிரஸ் கட்சியின் தலைவரான ராவ் தீவிர முயற்சியும் எடுத்துக் கொண்டார். ஜெயலலிதாவுடன் அவர் இது குறித்து நேரடியாகப் பேசியதோடு நெருக்கடி தீவிரமடைந்தபோது தனது அமைச்சர்கள் பலரையும் சென்னைக்கு அனுப்பி வைத்தார். ஜெயலலிதா இவை எதையும் பொருட்படுத்தவில்லை.

இதேவேளை, ஜெயலலிதாவுடன் தொடர்ந்து நட்பைப் பேண தமிழக காங்கிரஸ்கட்சி தலைமையோ அன்றி உறுப்பினர்களோ தயாராக இருக்கவில்லை. அ.திமு.க காரர்களின் அவமதிப்புக்களினாலும் அதிரடிகளினாலும் ஆடிப்போயிருந்த தமிழக காங்கிரஸ் கட்சியின்தலைமையும் தொண்டர்களும் அ.தி.மு. கவுடன் இருந்த உறவு விட்டாலே போதும் என்ற நிலையிலே இருந்தனர். இதில் தமிழககாங்ரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி, அவரது போட்டியாளரான மூப்பனார் சட்டசபை எதிர்க்கட்சித் தலைவரான பாலசுப்பிரமணியம், மத்திய அமைச்சரான அருணாசலம் ஆகிய சகலரும் தமது முரண்பாடுகளைக் கைவிட்டு ஒரே அணியில் இருந்தனர்.

இந்நிலையில் தான் அ.தி.மு.க.வுடனான உறவு முறிவு தமிழக காங்கிரசைப் பொறுத்து சுதந்திரம்பெற்றுவிட்டது போன்றதொரு உணர்வையும் மத்திய ஆட்சியிலுள்ள காங்கிரஸ்காரருக்கு ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள மான அவஸ்தைப்பட வேண்டிய நிலையையும் உருவாக்கியிருந்தது. இருப்பினும் ஜனதா தளத்தில் இருந்து பிரிந்து வந்த 'அஜித்சிங்' தலைமையிலான 20 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றதினால் ஓரளவு நெருக்கடி தணிந்திருந்தது.

இருப்பினும், தி.மு. கவும் மேலும் பல எதிர்க்கட்சிகளும், சுப்பிரமணியம் சுவாமி போன்றோரும், முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் குறித்து மத்திய அரசாங்கம் தீவிரநடவடிக்கை எதையும் முடுக்கி விட்டதாக இல்லை. இருப்பினும், ஜெயலலிதாவிற்கு மிகவேண்டியவரான ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் பதவி விலக வேண்டி வந்து அத்தோடு ஜெயலலிதா அரசாங்கம் மீது சில குற்றச்சாட்டுக்களை கூறுவதோடு நிறுத்திக் கொண்டது. இதில குறிப்பாக, தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடமாட்டம் பற்றியும், விடுதலைப் புலிகள் பொலிசாரிடம் இருந்து தப்பி ஓடியது பற்றியும் அடிக்கடி மத்திய அரசுதனது கவலையை வெளியிட்டது.

ஆனால், ஜெயலலிதா வழமை போலவே தனது அதிரடி நடவடிக்கைகளையும், பேச்சுக்களையும் நடத்தினார். உள்துறை அமைச்சர் சவான் தமிழகத்தின் பாதுகாப்பு குறித்தும், விடுதலைப்புலிகளின் நடமாட்டம் குறித்தும் பிரஸ்தாபித்த போது அமைச்சர் எஸ்.பி சவான் கடந்த டிசம்பரில் தன்னைச் சந்தித்த போது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடிய சூழ்நிலையை ஆராயுமாறு கூறியதாகக்குண்டொன்றை தூக்கிப் போட்டார். இதன் பின்னர் இருவரும் மறுப்பிற்கு மறுப்பு என்ற ரீதியல் சூடான வாக்குவாதங்களிலும் ஈடுபட்டனர்.

## ஜெயலலிதாவின் நிலையிலும் மாற்றம்?

ஆனால் ஜெயலலிதா இன்றும் காங்கிரஸினுடனான போக்கில் அதே நிலையில் இருக்கின்றாரா என்பதில் அரசியல் அவதானிகளிடம் சந்தேகம்நிலவுகின்றது. இதற்குபல காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இதில் முக்கியமானது தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் தனிப்பட்ட ரீதியான செல்வாக்கும், கட்சியின் செல்வாக்கும் வீழ்ச்சி கண்டுள்ளதோடு, ஜெயலலிதாவின் கடந்த கால, எதிர்கால அரசியல் அணுகுமுறையில் மக்கள் பெரும் திருப்தி கொள்ளவில்லை என்பதே ஆகும்.

அண்மையில் தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்ட கருத்துக் கணிப்பொன்று மேற் குறிப்பிட்டவாறு ஜெயலலிதாவின் செல்வாக்கு வீழ்ச்சி கண்டுள்ளதைத் தெளிவாகக் காட்டுவதோடு, தற்பொழுது தேர்தல் ஒன்று நடக்குமிடத்து அ.தி.மு.கவின் நிலை மூன்றாம் இடத்திற்கு தள்ளப்படும் எனத் தெரிவித்துள்ளது. இந் நிலையில், தற்பொழுது தேர்தலைச் சந்திக்கும் விஷப்பரீட்சையில் ஜெயலலிதா இறங்க விரும்ப மாட்டார் என்பதே அரசியல் அவதானிகள் கருத்தாகும்.

இதேவேளை, ஜெயலலிதாவின் அரசியல் கணிப்பின்படி பாரதீய ஜனதாக் கட்சியுடன் எதிர்காலத்தில் கூட்டுச் சேருவதினால், பெரிய நன்மை ஏதும் கிட்டாது என்பதையும் உணர்த்தக் கூடியதாக சென்னையில் பாரதீய ஜனதாக்கட்சி நடத்திய பேரணி அமைந்தது. பெரும் பிரசாரத்துடனும், ஜெயலலிதாவின் ஆசீர்வாதத்துடனும் நடந்த இக்கூட்டத்தில் 30,000 க்கும் குறைவான மக்களே கலந்து கொண்டனர். இந்நிலையில் இந்து அடிப்படைவாதம் தமிழகத்தில் தற்பொழுது வளர்வதற்கான சாத்தியப்பாடும் இல்லை என்ற நிலையில், தமிழகத்திலுள்ள வாக்காளர்களில் ஆறு வீதமான முஸ்லிம் வாக்காளர்களையும் இழந்து விடும் நடவடிக்கை எதையும் அவர் மேற்கொள்ளத் தயாராக இருக்கமாட்டார் என்றே கூறலாம்.

இந்நிலையில் தான் காங்கிரஸ் உடனான தனது கடும் போக்கை சற்றுத் தணித்துக் கொள்ள ஜெயலலிதாவும் தயாராக இருப்பது போன்று உள்ளது. ஜெயலலிதாவின் இப்போக்கு மாற்றத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே அமைச்சர் ராஜேஸ்பைலட் உடனான சந்திப்பு சுமுகமாக நடந்து முடிந்துள்ளமையாகும். இச்சந்திப்பில் ஜெயலலிதா சற்று தணிவாக நடந்து கொண்டார் என்பதற்கு, தப்பிஓடிய விடுதலைப் புலிகள் தொடர்பாக அமைச்சர் ராஜேஸ் பைலட் உரையாடிய போது ''பின்னணி அற்ற தனிச் சம்பவம்'' என அவர் குறிப்பிட்டார். ஆனால், இச் சம்பவம் இடம்பெற்ற வேளை, அது மத்திய அரசாங்கமும் உளவுத்துறையும் இணைந்து செய்த சதி என ஜெயலலிதா பகிரங்கமாகக் குற்றம் சாட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சந்திப்பின் மூலம் ஜெயலலிதாவிற்கு சிலஅனுகூலங்கள் கிட்டின. நீண்டகாலமாகஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிவந்த கோரிக்கைகள் பற்றி மத்திய அரசு விரைவில் பரிசீலிக்கும் என உறுதி கூறப்பட்டுள்ளது. அத்தோடு, 500 ஏ.கே 47 ரக துப்பாக்கிகளை தமிழகத்திற்கு வழங்குவதோடு, காவல்துறையை நவீனமயப்படுத்தவும், கரையோரப் பாதுகாப்பைப் பலப்படுத்த மத்திய அரசு உடனடியாக உதவி அளிக்கும்எனவும் அமை

**- ஜெயராஜ் -**

ச்சர் உறுதி அளித்துள்ளார். மேலும், இலங்கை அகதிகளை விரைவில் வெளியேற்ற வேண்டும் என்ற ஜெயலலிதாவின் கோரிக்கையும், கூடுதல் நிதி உதவி கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ராஜேஸ் பைலட் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பும், ஜெயலலிதாவைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கையும் மாநில-மத்திய அரசிற்கு இடையிலான ஒருங்கிணைந்த நடவடிக்கை எனவும், விடுதலைப்புலிகளால் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கெனவும் அமைச்சர் ராஜேஸ் பைலட், விளக்கமளிக்க முற்படினும், அரசாங்கம் பாராளுமன்றத்தில்] ஆசனங்களைக் கொண்டுள்ள ஒரு பிராந்தியக் கட்சியுடன் சமரசம் செய்துகொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கை என்று கூறுவதே பொருத்தப்பாடானதாகும்.

இந்நிலைய்ல்எதையுமே அதிரடி நடவடிக்கையாக மேற்கொள்ளும் ஜெயலலிதா அரசு மத்தியில காங்கிரஸ் ஆட்சியை கவிழ்க்கக்கூடிய செயற்பாடுகளில் இறங்காதவரை 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்ற நிலையில், மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசு செயற்படுவது போன்று தமிழகத்தில் அ.தி.மு.க. அரசும் செயற்படும் வாய்ப்புக்களே அதிகமாகும்.

---

## இந்திய

அவ்வறிக்கை கூறுகிறது. உலகில் சுமார் 2700 வகையான பாம்புகள் இருக்கின்றன. இவற்றில் 93 இனங்களே இலங்கையில் காணப்படுகின்றன. விஷப்பாம்புக் கடிக்கான மருந்துகள் இங்கு உற்பத்திசெய்யப்படுவதில்லை என்றும் இவை இந்தியாவிலிருந்தே இறக்குமதியாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால்இந்திய பாம்புகளின் சூழலும் வாழ்க்கை முறையும வித்தியாசமாக இருப்பதால்இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் மருந்துகள் இங்குள்ள நோயாளிகளுக்கு செலுத்தப்பட்டால் பிரச்சினைகள் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இம்மருந்துகள் இப்போது உள்நாட்டிலேயே உற்பத்திசெய்ய முயற்சி எடுக்கப்படுகிறது. கொழும்பு பல்கலைக்கழக வைத்தியபிரிவு தலைவரும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக பேராசிரியரும் இந்த முயற்சியில் இறங்கியுள்ளனர்.

---

## அடையாள அட்டைகள் வந்தன

(யாழ்ப்பாணம்)

சுமார் 500 அடையாள அட்டைகள் கொழும்பில் இருந்து யாழ். செயலகத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இவை சகலஉதவிஅரச அதிபர் பணிமனை ஊடாக உரியவர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

## பணிப்பாளர் கொழும்பு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் இன்று கொழும்பு பயணமாகிறார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் நிலவும் குறைபாடு களைப் போக்கிக் கொள்ளும் நோக்குடன் சுகாதார உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்கே அவர் கொழும்பு பயணமாகிறார் என்று தெரிவிக்கப்பட்டது.

சமீப காலத்தில் பிரித்தானிய அரசினால் வடபகுதிக்கென வழங்கப்பட்ட வைத்திய சாலைப் பொருள்களை எடுத்துவருவது பற்றியும் மற்றும் எக்ஸ் றே கருவிக்குத் தேவையான சில பொருள்களை எடுத்துவருவதுபற்றியும் இவர் உயர் அதிகாரிகளுடன் பேசவுள்ளார். (தி)

# செஞ்சிலுவை சங்கம் செய்தி மட்டும் பரிமாறுகிறது

## பிரட்மன் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் வசமுள்ள போர் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக அவர்களிடமிருந்து உறுதியான பதிலேதும் கிடைக்கவில்லை என கூட்டுப்படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்திகளை பரஸ்பரம் பரிமாறுவதில்தான் உதவுகின்றனர் அவர்கள் சமரசப் பேச்சாளர்களாக செயற்படவில்லை என செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட பிரட்மன் வீரக்கோன் கூறினார்.

முன்னதாக போர் கைதிகள் விடுதலை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினாலேயே பாதிப்படைந்ததாக அரச சார்பு பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

## முதலமைச்சராக செயற்பட முடியாமல் உள்ளது

### சந்திரிகா கவலை

(கொழும்பு)

நான் முதலமைச்சராக மேல் மாகாணத்தில் செயற்பட முடியாமல் உள்ளது. இங்கு சாதாரண எழுதுவினைஞர்போலவே கடமையை செய்கின்றேன் அரசியல் அமைப்பின் 13-ம் சரத்துபடி உள்ள மாகாண சபை அதிகாரங்கள் கூட மேல் மாகாண சபைக்கு தரப்படவில்லை என மேல் மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க மேல் மாகாண சபையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக கருது தெரிவிக்கையில் அரசாங்கம் பல முட்டுக்கட்டைகளைப்போட்டு வருவதாகவும் எனவே எதுவும்செய்யமுடியாத நிலையில் தான் சிக்கி தவிப்பதாகவும் தெரிவித்தார்.

மேல்மாகாண சபையை தமது கட்சிஆட்சி பொறுப்பை ஏற்றதில் இருந்து அதனை கைப்பற்றுவதன் நோக்காக கொண்டு பல சதிகளைசெய்ய அரசு முயல்கிறது என்றும் இதன் அடிப்படையில் தான் தற்போது ஜனநாயக ஐக்கிய முன்னணியுடன் நடைபெறும் பேச்சுக்கள் என்றும் சந்திரிகா குமாரணதுங்க மேலும் தெரிவித்தார்.

மங்கள முனசிங்கவின் கருத்துப்படி மேற்படி கருத்துக் கணிப்புவாக்கெடுப்பை நான்கு மாதங்களில் நடத்தமுடியும் என பாதுகாப்பு படையினர் கூறியுள்ளனர்.

இதற்காக இப்பகுதிகளில் இருந்து போராளிகளை வெளியேற்ற பாதுகாப்பு படையினர் முயற்சி செய்து வருகின்றனர். இதற்காக ஆங்காங்கே மோதல்கள் நடை(பெற்று வருகின்றன. எனவேநிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டவுடன் கருத்துகணிப்பை நடத்த முடியும் என முனசிங்கா கூறியுள்ளார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்கபபட்டு இரண்டு ஆண்டுகளாகியும் போரை நிறுத்துவதற்கான திட்டமொன்றை அதனால் முன்வைக்க முடியவில்லை. மூன்று இனங்களுக்கு இடையே கருத்து ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆரம்பக் கட்டத்திலேயே அது வெற்றிபெறவில்லை. இக் குழுவிலிருந்து தமிழ் மற்றும் முஸ்லிம் குழுவினர் வெளியேறிவிட்டனர். இது வெறும் கேலிக்கூத்து என அவர்கள் கூறிவிட்டனர்.

இந்த பாராளுமன்ற தெரிவு குழு தீர்வுகாணும் நிலையில் உளளது என்று சர்வதேச சமூகத்திற்கு அடிக்கடி அரசு கூறிவந்துள்ளது. ஆனால் அது பொய் என்பது அரசியல் வாதிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் இன்று தெளிவாகியுள்ளது.

கிழக்கில்

கருதி வந்துள்ளனர்.

பின்னர் அரசு கிழக்குப் பகுதியில் சிங்கள குடியேற்றத்தை மேற்கொண்டு வந்ததால் இரண்டு இனங்களும் கலந்த ஒருபகுதியாக இது மாறிவிட்டது.

எனவே கிழக்கில் வாழும் மக்கள் வடக்குடன் இணைய விரும்புகிறார்களா என கருத்துக்கணிப்பை நடாத்த பாராளுமன்ற தெரிவுக்குழு விரும்புகிறது.

எனவே பாராளுமன்ற தெரிவுக்குழு அங்கத்தவர்கள் இந்த வாரத் தொடக்கத்தில் பாதுகாப்பு உயர் அதிகாரிகளைச் சந்தித்தனர். தமிழ்தீவிரவாதிகள உரிமை கொண்டாடும் கிழக்குப் பகுதியில் அமைதியான முறையில் தேர்தல் நடாத்த முடியுமா என விவாதித்தார்கள்.

## பலநாள் திருட்டு அம்பலமானது

(தென்மராட்சி)

இரண்டு வருடங்களுக்கு முன் களவாடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரம் (றொபின்) இரண்டு சாவகச்சேரி காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளது.

அண்மையில் பல துவிச்சக்கர வண்டிகளை களவாடிய நபர் மீது காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டபோது இந்நபர் பல திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்தனர். இந்நபர் மேற்படி ஒரு நீர் இறைக்கும் இயந்திரத்தை ஓமந்தை பகுதியிலும் மற்றைய நீர் இறைக்கும இயந்திரத்தை 55ஆம் கட்டை கிளிநொச்சியிலும் களவாடியுள்ளார். இவர் அண்மையில் பளைப்பகுதியில் வந்து வசித்து தற்போது மட்டுவிலில் வசித்து வந்து பல களவுகளில் ஈடுபட்ட போதே சாவகச்சேரி காவல்துறையினரிடம் அகப்பட்டார். (86)

## படையினர் தினமும் சூடு

(குருநகர்)

கடந்த சில மாதங்களாக அமைதி நிலையில் இருந்த மண்டை தீவுசிறிலங்கா இராணுவக் காவலரண்களில் இருந்துஇப்பொழுதுதினமும்எந்த நேரத்திலும் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுவருவதாக கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கடற்றொழிலில் ஈடுபட முடியாமல் பாதிப்பு நிலைக்கு தள்ளப்படுவதாகவும் மீனவர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப் படுகிறது. (21),(22)

ஜனாதிபதி

தலைவர் பதவிக்கு போட்டி ஏற்படும் என்றும் தற்போதைய ஜனநாயக ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசிய கட்சியுடன் இணையும் சமயத்தில் காமினி திசாநாயக்காவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையே பலத்த போட்டியாக இது அமையும் என்றும் பலர் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து விலகலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மனித

காரணங்களை முன் வைத்து இதுவரை இதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று சர்வதேச மன்னிப்பு சபை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை வடக்கில் நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகள் மீதான கண்ணி வெடித் தாக்குதலை தொடர்ந்து கிழக்கில் ஆண்கள் பெண்கள் குழந்தைகள் உட்பட முப்பத்தைந்து பேர் படையினரால் கொலை செய்யப்பட்டதையும் அந்த அறிக்கை வெளியிட்டுள்ளது.

மேலும் இந்தியாவில் ஜம்மு காஷ்மீரில் இந்தியஇராணுவத்தினால் மிக உச்சக்கட்டத்தில் மனித உரிமை மீறல் மேற்கொள்ளப்படுவதாகவும் அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

## அரசஅதிபர் யாழ் திரும்புகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் இன்று யாழ்ப்பாணம் திரும்புகிறார்.

கொழும்பில் இருந்து அனுராதபுரத்துக்கு சென்ற அரச அதிபர் இன்று காலை விமான மூலம் பலாலி விமானத் தளத்துக்கு வந்து அங்கிருந்து காங்கேசன் துறையூடாக பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைய இருக்கிறார்.

## ஒருவாரத்தில் 6 படை பலி

மன்னாரிலும், வெலிஓயா பகுதியிலும் இவ்வாரம் நடைபெற்ற மோதல்களில் 6 படையினர் பலியானதாக கூட்டுப் படை தலைமையகப் பேச்சாளர் பிரிகேடியர் அங்கமன நேற்று தெரிவித்தார்.

## 'வீரகுமாரன்' நாடகம்

(தொல்புரம்)

சுழிபுரம் ஐங்கரன் கலாமன்றத்தினர் வழங்கும் ''வீரகுமாரன்'' இசை நாடகம் நாளை சனிக்கிழமை மாலை தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய முன்றலில் உள்ள மோகன் அரங்கில் அரங்கேற்றப்படவுள்ளது.

மேற்படி நாடகத்தினை பிரபல நாடகத் தயாரிப்பாளரும், இயக்குநருமான காரைநகர் மூத்ததம்பி தேவதாஸ் அவர்கள் நெறிப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (41)

அரசியல்

துங்கா பதவி ஏற்றதும் எதிர்க் கட்சியினரின் இக்கோரிக்கை குறித்து தாம் சாதகமாக பரிசீலிப்பதாக அவர் உறுதி வழங்கினார்.

இதன் பொருட்டு அரசியல் யாப்பு விவகாரத்திற்கென புதியஅமைச்சராக ஜனாதிபதி சட்டத்தரணியான சொக்ஸி ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார். தற்போதைய அரசியல் யாப்பில் தேவையான மாற்றம் செய்வது குறித்து ஆராய்வதே அமைச்சர் சொக்ஸியின் முதற் பணியாக இருக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சிறிலங்காவின் அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சிமுறை பிரான்ஸ் அமெரிக்கா ஆட்சிமுறைகளைத் தழுவியதாக உள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

## வீரச்சாவு



மேஜர் முகிலன்



கப்டன் ஜீவிஜயன் [முத்தமிழரசு]



கப்டன் சான்டோ [பெரியதம்பி]

## ஆளுநர் டில்லிக்கு விஜயம்

(சென்னை)

தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி நேற்று காலை புது டில்லி புறப்பட்டுச் சென்றார். இவர் நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு டில்லி செல்கிறார்.

சிறப்பு

தலைமை அமைச்சரிடம் கூறியது குறித்தும் சிறப்புப் புலனாய்வுப் பிரிவு விசாரிக்க தவறிவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ராணுவம்

தியில் சென்றுகொண்டிருந்த போராளிகள் மீது இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் மேஜர் முகிலன் (பொன்னுத்துரை நவரட்ணம்- அன்பு வெளிபுரம் திருக்கோணமலை), கப்டன் விஜயன்/முத்தமிழரசு (சிவலிங்கம் கமலதாஸ்- 12ஆம்வட்டாரம், அலஸ்தோட்டம். திருக்கோணமலை) ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த இம்மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 08-07-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10245

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

இல்லை

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-2680, 24-4238, 41-6784, 41-1531, 24-4323
24-6211, 24-5912, 26-3998, 37-1145.

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

NIGHT HAWKS

(இரவுப் பருந்துகள்)

(தமிழ் விளக்கம்)

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி

(சி-6959)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூலை மாதம் 09-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.